# இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் - 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 6
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு 2015

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள், விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளப்பங்களிப்பு/ கலைத்திட்டக் குழு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுகவம்

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை
**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
பிரதிப் பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**மௌலவி ஏ.எல்.எம். அலியார்**
பிரதிநிதி, கல்விக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா
**மௌலவி எம்.ரீ. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக** **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக** **எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.
**எம்.எச்.எம். புஹாரி**
ஆசிரிய ஆலோசகர்.
**எம்.எஸ்.எம். அனஸ்**
ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை.
**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி., நாம்புளுவ.
**எஸ்.ஏ.எம். றிஸ்வி**
ஆசிரியர், அல்ஹுதா மு. மகா வித்தியாலயம், ரிதீகம.
**எஸ்.எம்.ஆர். சூதீன்**
ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி.
**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொட கல்வி வலயம்.
**எம்.ஏ ஜெம்ஸீத்**
ஆசிரியர், அல்ஹிதாயா மகா வித்தியாலயம், கொழும்பு 10

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றதுது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்கு தேவையான காலப்பகுதியை சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தை திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காக குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களை பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தை திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்தவொரு எதிர்கால சந்ததியை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| • வளப்பங்களிப்பு | v |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi |
| அறிமுகம் | x |
| தேசிய இலக்குகள் | xi |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xiii |
| பாடத்திட்டம் | xvi |
| கற்றல் கற்பித்தல் முறை | xx |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | xxi |
| கணிப்பீடும் மதிப்பீடும் | xxii |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1-73 |

## 1.0 அறிமுகம்

மனிதன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படும்போதுதான், முழுமையான ஆளுமை விருத்தியடைய முடியும். இந்த நிலைப்பாட்டிலேயே இஸ்லாம் மனிதனின் ஆன்மீக, தார்மீக வாழ்வுக்கான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்கியிருக்கின்றது.

இன்றைய உலகம், விஞ்ஞான தொழிநுட்ப சாதனங்களுக்கூடாக பெருவாரியான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உடல், அறிவு என்பவற்றை போஷிக்கும் அதேவேளை ஆன்மீகத்தை புறக்கணிக்கின்றது. ஆன்மீக வாழ்வு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக மனித வாழ்வு அமைதியையும் மகிழ்வையும் இழந்து நிற்கின்றது.

கவலை, மன இறுக்கம், விரக்தி முதலான உளநோய்கள் மனிதனில் வேரூன்றி வருகின்றன. மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக வாழ்வதற்கான உரிமைகூட கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைக்கன்றி உணர்வுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக வன்முறை, கட்டற்ற நுகர்வு, சுரண்டல், மோசடி முதலானவை இறைவனை புறக்கணித்த வாழ்வுமுறைக்கு மனிதனைத் தள்ளிவிட்டுள்ளன.

இந்நிலையை அவதானித்து வரும் சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் ஆன்மீகத்தினதும் விழுமியங்களினதும் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆன்மீக வறுமைக்குட்பட்டிருக்கும் மனித சமுதாயத்தை விடுவிக்கின்ற பயிற்சியை வழங்கும் பெரும் பணியை சமயப் பாடத்திடமும் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வு முறைகளில் சமயமும் அது சார்ந்த விழுமியங்களும் முக்கியத்துவம் பெற வேண்டிய தேவை எமது நாட்டிலும் உணரப்பட்டு வருகின்றது. நலிவுற்றிருக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சமயத் தலைவர்கள் மட்டுமன்றி, கல்வியியலாளர்களும் உணர்த்தி வருகிறார்கள்.

வேகமாக மாறிவரும் உலகில் மானிடப் பெறுமானங்கள் தளர்ந்து விடாமல் பாதுகாப்பதற்கு கவர்ச்சிகரமான சமயப் போதனையும், ஆன்மீகப் பயிற்சியும் அவசர நடவடிக்கைகளாக விதந்துரைக்கப்படுகின்றன. எனவே, இஸ்லாம் பாடத்திற்கூடாகவும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி என்பன விருத்தி செய்யப்பட்டு அவை நடைமுறை வாழ்வில் பிணைந்து கொள்ளும் அளவிற்கு இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாம் நிலையானதும், காலத்தால் மாறாததுமாகும். இருப்பினும் காலத்துக்கு பொருத்தமான வகையில் ஷரீஆவை கற்பதற்கான உத்திகளையும் அணுகுமுறைகளையும் கையாள்வதனை அது தடுக்கவில்லை. எதிர்கால சந்ததியினர் இஸ்லாத்தினது தூதின் ஒளியில் பயணிப்பதற்கான பயிற்சியையும் அனுபவத்தையும் வழங்கும் வகையில் இஸ்லாம் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த இலட்சியத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது ஆசிரியர்களே பிரதான பங்குதாரர்களாவர். எனவே ஆசிரியர்கள் தமது பணியும் பங்களிப்பையும் விருத்திசெய்துகொள்வதற்காகத் தம்மைத் தயார்படுத்திச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

## 6.2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 6. 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**
தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு :கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு :பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு :கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை:கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் nj ho py ; EI gq f i s g; (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**
இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும்சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 6.4 6 ஆந் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. **அர்கானுல் ஈமான்**

   ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

2. **அர்கானுல் இஸ்லாம்**

   இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.

3. **அல்அஹ்லாக் வத்தஸ்கிய்யா**

   இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழி காட்டுவார்.

4. **அல்குர்ஆன் வஸ்ஸுன்னா**

   இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அவற்றின் போதனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்

5. **அஸ்ஸீறா வத்தாரீஹ்**

   நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புகளையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

6. **அல்முஆமலாத்**

   பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

7. **அல்மபாஹீமுல் இஸ்லாமிய்யா**

   ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.

# பாடத்திட்ட உள்ளடக்கம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 **அர்கானுல் ஈமான்**<br>ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார் | 1.1 ஈமான் பற்றிய அடிப்படைகளை அறிந்து கூறுவார் | • ஈமான் பற்றிய அறிமுகம்<br>• ஆமன்து பில்லாஹ்<br>• தவ்ஹீத், றிஸாலத், மஆத் பத விளக்கம் | • சிறந்த மு.ஃ.மினாக வாழ்வதற்கான அடிப்படைகளை அறிந்து விளக்குவார்.<br>• ஈமானின் ஆறு அம்சங்களையும் நம்பி எடுத்துக் கூறுவார்.<br>• ஈமானின் அம்சங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புறும் விதத்தை விபரிப்பார்.<br>• தவ்ஹீத், றிஸாலத், மஆத் என்பவற்றில் உள்ளடங்குபவற்றை அட்டவணைப்படுத்துவார். | 02 |
| | 1.2 அல்லாஹ் படைப்பாளன் என்பதை விளக்கிக் கூறுவார் | • அல்லாஹ் - படைப்பாளன்<br>• அல்லாஹ்வின் படைப்புக்கள்<br>- மலக்குகள்<br>- ஜின்கள்<br>- மனிதர்கள்<br>- உயிரிகள்<br>- பௌதிக படைப்புக்கள் | • அல்லாஹ்வின் படைப்புக்களை அவதானித்து அவனது வல்லமைகளை எடுத்துக் கூறுவார்.<br>• படைப்பினங்களில் காணப்படும் நன்மைகளை பட்டியல்படுத்துவார்.<br>• படைப்பினங்களை அவதானிப்பதன் மூலம் ஈமானை பலப்படுத்தி வாழ்ந்து காட்டுவார்.<br>• மலக்குகளினதும் ஜின்களினதும் வேறுபாட்டை விளக்கிக் கூறுவார்.<br>• மலக்குகளும் ஜின்களும் அல்லாஹ்வின் ஏனைய படைப்புகளிருந்து வேறுபடும் விதத்தை அறிந்து எழுதிக் காட்டுவார்..<br>• பௌதிக படைப்புக்கள் அல்லாஹ்வின் அருள் என்பதை எடுத்துக் காட்டுவார்.<br>• பௌதிக படைப்புக்களின் நன்மைகளை அறிந்து எழுதிக் காட்டுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0<br>**அர்கானுல் இஸ்லாம்**<br>இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார். | 2.1 இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை ஆதாரங்களுடன் அறிந்து கூறுவார். | • இஸ்லாம் பற்றிய அறிமுகம்<br>• இஸ்லாம் என்பதன் விளக்கம்<br>• இஸ்லாத்தின் கடமைகள்<br>- ஹதீஸ் ஆதாரம் | • இஸ்லாம் என்பதன் சொல் விளக்கத்தை கூறுவார்.<br>• அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதன் மூலமே சாந்தியும் சமாதானமும் உருவாகும் என்பதை ஏற்று நடைமுறைப்படுத்துவார்.<br>• இஸ்லாத்தின் பிரதான கடமைகளை எடுத்துக் கூறுவார்.<br>• இஸ்லாத்தின் கடமைகளை முடியுமானவரை பேணி நடப்பார். | 02 |
| | 2.2 தொழுகையின் முன்னாயத்தங்களை அறிந்து அவற்றை நிறைவேற்றி வருவார் | • அத்தஹாரா பற்றிய அறிமுகம்<br>• சுத்தம் பற்றிய கண்ணோட்டம் - முக்கியத்துவம்<br>• நீரின் வகைகள்<br>• சுத்தம் செய்யும் முறைகள் | • இஸ்லாம் சுத்தத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவார்.<br>• சரியான முறையில் வுழுச் செய்வார்.<br>• நஜீஸின் வகைகளைக் கண்டறிந்து கூறுவார்.<br>• திரவ வகைகளை தஹுர், தாஹிர், நஜீஸ் என வகைப்படுத்துவார்.<br>• எப்போதும் உடல், உடை, வாழும் இடம் ஆகியவற்றில் சுத்தம் பேணி நடப்பார். | 04 |
| | 2.3 தொழுகையின் விதிமுறைகளை அறிந்து தொழுது வருவார் | • தொழுகை<br>– அறிமுகம்<br>– சிறப்புக்கள்<br>– விதிமுறைகள்<br>– ஷர்த்துக்கள்<br>– பர்ளுகள்<br>– சுன்னத்துக்கள்<br>– முப்திலாத்கள் | • தொழுகை இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்று என்பதை அறிந்து கூறுவார்.<br>• தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புக்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.<br>• நாளாந்தம் தொழுகையை விருப்பத்துடன் நிறைவேற்றி வருவார்.<br>• தொழுகையின் முக்கியத்துவம், சிறப்புக்கள் பற்றி பிறருக்கு எடுத்துக் கூறுவார்; தொழுகையின் பால் அழைப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4<br>நோன்பு பற்றி அறிந்து நோன்பு நோற்று வருவார். | நோன்பு - அறிமுகம் | • நோன்பின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.<br>• ரமழானின் சிறப்புக்களை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார்.<br>• நோன்பின் நோக்கத்தைப் புரிந்து பேணுதலாக நோன்பு நோற்று பாவங்களிலிருந்து தவிர்ந்து வாழ்வார்.<br>• ரமழானில் செய்யப்படும் செயல்களுக்கு சிறப்புக்கள் உண்டு என்பதை அறிந்து பிறருக்குக் கூறுவார்.<br>• நோன்பின் தாத்பரியத்தை அறிந்து தெளிவுபடுத்துவார். | 02 |
| 3.0<br>**அல் அஹ்லாக் வத்தஸ்கிய்யா**<br>இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு | 3.1<br>பெற்றோரைக் கண்ணியப்படுத்துவார | • பெற்றோர்<br>- அந்தஸ்து<br>- உதவி செய்தல்<br>- பிரார்த்தித்தல் | • பெற்றோரை கண்ணியப்படுத்துவன் அவசியம் குறித்து விளக்குவார்.<br>• பெற்றோரது கண்ணியத்திற்கு பாதிப்பு ஏற்படும் அம்சங்களை அறிந்து அவற்றிலிருந்து தவிர்ந்து நடப்பார்.<br>• பெற்றோருக்காக எப்போதும் உபகாரம் செய்து நடந்து கொள்வார்.<br>• பெற்றோருக்காக எப்போதும் பிரார்த்தனை செய்து வருவார். | 02 |
| | 3.2<br>ஆசிரியர்களின் அந்தஸ்தை அறிந்து அவர்களைக் கனம் பண்ணுவார் | • ஆசிரியர்கள்<br>- அந்தஸ்து<br>- கண்ணியப்படுத்தல்<br>- பிரார்த்தித்தல் | • ஆசிரியர்களது அந்தஸ்து, கண்ணியம் என்பன பற்றி அறிந்து விளக்குவார்.<br>• எப்போதும் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவதோடு அவர்களுக்காகப் பிரார்த்தித்தும் வருவார்.<br>• ஆசிரியர்களுடன் பண்பாக நடந்து கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3<br>நாவைப் பேணி நடப்பார் | • நாவைப் பேணுதல்<br>- பண்பாகப் பேசுதல்<br>- நன்றி கூறல்<br>- வாழ்த்துத் தெரிவித்தல் | • நாவைப் பேணுவதால் கிடைக்கும் நன்மைகளை அறிந்து கூறுவார்.<br>• பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• மக்கள் மனதைக் கவரும் அழகிய வார்த்தைகளால் ஈருலகிலும் நன்மை பெறலாம் என்பதை ஏற்று நடைமுறைப்படுத்துவார்.<br>• தொடர்பாடலின்போது மனங்கவரும் வண்ணம் அன்பான வார்த்தைகளைப் பிரயோகிப்பார். | 02 |
| | 3.4<br>வீடுகளிலும் சபைகளிலும் அனுமதி பெற்று நுழைவார் | • அனுமதி பெறல்<br>- அனுமதியின் முக்கியத்துவம்<br>- வீடுகளில் நுழைதல்<br>- சபைகளில் நுழைதல் | • வீடுகளிலும் சபைகளிலும் நுழையுமுன் அனுமதி பெறுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.<br>• வீடுகளிலும் சபைகளிலும் பேண வேண்டிய ஒழுங்குகளை பட்டியற்படுத்துவார்.<br>• வீடுகளிலும் சபைகளிலும் இஸ்லாமிய விழுமியங்களைப் பேணி நடப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து ஒழுகுவார். | 02 |
| | 3.5<br>பிறர் தேவையை முற்படுத்தி வாழ்வார். | • பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குதல் | • பிறருக்கு உதவக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து கூறுவார்.<br>• பிறருடைய தேவையை முற்படுத்துவதன் அவசியத்தை ஏற்று நடப்பார். | 02 |
| 4.0<br>**மஸாதிருஷ் ஷரீஆ**<br>இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். | 4.1<br>அல்குர்ஆனை முறையாகக் கையாளுவார் | • அல்-குர்ஆன்<br>– அறிமுகம் | • பிறருக்கு உதவுவது உயர்ந்த தர்மம் என்பதை விளக்குவார். பிறருக்கு உதவுவதனால் கிட்டும் பயன்களை அறிந்து உதவி செய்வார்.<br>• அல்குர்ஆன் இறுதியான பொதுமறை என்பதை விளக்குவார்.<br>• அல்குர்ஆனின் மீது தமக்கு கடமைகள் உள்ளன என்பதை ஏற்று நடப்பார்.<br>• அல்-குர்ஆன் சகல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது என்பதை மேற்கோள்களுடன் விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.2<br>அல்குர்ஆனின் சூறாக்களை திருத்தமாக ஓதிக்காட்டுவார் | • அல்குர்ஆனைக் கையாளும் ஒழுங்குகள் | • அல்குர்ஆனை ஓதி, விளங்கி, வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.<br>• அல்குர்ஆனின் அமைப்பை ஓதுவதற்கும், விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்திக்கொள்வார்.<br>• அல்குர்ஆன் புனிதமான வேதநூல் என்பதை விளக்குவார்.<br>• அல்குர்ஆன் ஓதப்படும் முறைகளை அறிந்து ஓதி வருவார்.<br>• அல்குர்ஆனை மனனமிடுவதன் சிறப்பை அறிந்து மனனமிட்டு ஓதுவார். | 02 |
| | 4.3<br>அல்குர்ஆன் சூறாக்களை மனனமிட்டு ஒப்புவிப்பார். | • சூறாக்கள்<br>- திருத்தமாக ஓதுதல்<br>- மனனமிடல்<br>- பொருள் கூறல<br>○ சூறத்துல் இக்லாஸ்<br>○ சூறத்துல் பலக்<br>○ சூறத்துன் நாஸ்<br>○ சூறத்துல் பீல் | • ஸூரதுல் இக்லாஸின் பதவிளக்கத்தைக் கூறுவார்.<br>• ஸூரதுல் பலக், நாஸ் என்பவற்றின் பதவிளக்கத்தை எடுத்துக் கூறுவார்.<br>• அல்லாஹ்வின் பாதுகாப்பை எதிர்பார்த்து இவ்விரு ஸூராக்களையும் ஓதிவருவார்.<br>• இவ்விரு ஸூராக்களிலும் அடங்கும் விடயங்களை தானும் அறிந்து பிறருக்கும் எடுத்துக் கூறுவார்.<br>• இந்த ஸூராக்களை செவிமடுக்கும்போது அவற்றின் பொருள்களைப் புரிந்து கொள்வார்.<br>• ஸூரதுல் பீலின் பதவிளக்கத்தை கூறுவார்.<br>• ஸூரதுல் பீல் இறங்கிய காரணத்தை தொகுத்து கூறுவார்.<br>• ஸூரதுல் பீல் புகட்டும் படிப்பினையை அறிந்து கூறுவார்.<br>• ஸூரதுல் பீல் கூறும் வரலாற்றுப் பாடத்தை அறிந்து மற்றையவர்களுக்கும் எடுத்துக் கூறுவார். | 05 |

| | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.4<br>ஹதீஸ் ஒரு சட்ட மூலாதராரம் என்பதை விளக்குவார். | • ஹதீஸ்<br>- அறிமுகம்<br>-சட்டமூலாதாரம் | • தனது ஈமானை வலிமைப்படுத்திக் கொள்வதற்காக இந்த ஸூராவை ஓதிக் கருத்தறிந்து வருவார்.<br>• ஹதீஸ் சட்ட மூலாதாரம் என்பதை விளக்குவார்.<br>• ஹதீஸின் வகைகளை அட்டவணைப்படுத்துவார்.<br>• குர்ஆனை விளங்கிக்கொள்ள ஹதீஸ் அவசியம் என்பதை எடுத்துக்காட்டுவார். | 02 |
| | 4.5<br>ஹதீஸ்களை மனனமிட்டு ஒப்புவிப்பார் | • ஹதீஸ்கள்<br>– கல்வி கற்றல் தொடர்பானவை<br>– விலக்கல் பற்றியவை<br>(பொய் சொல்லல், பட்டப் பெயர் சூட்டுதல்) | • குர்ஆன் ஹதீஸுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை எடுத்துக்கூறுவார்.<br>• ஹதீஸ் போதனைகளை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.<br>• ஹதீஸின் ஏவல்களையும் விலக்கல்களையும் அறிந்து நடைமுறைப்படுத்துவார்.<br>• பொய் பேசுவது முனாபிக்குகளின் பண்பு என்பதை அறிந்து அதிலிருந்து விலகி இருப்பார்.<br>• பட்டப் பெயர் சூட்டுதல் தடுக்கப்பட்ட காரியம் என்பதை அறிந்து தானும் அதிலிருந்து தவிர்ந்து பிறரையும் தடுத்துக் கொள்வார். | 02 |
| 5.0<br>**அஸ்ஸீரா வத்தாரீஹ்**<br>நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார். | 5.1<br>முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பு, இளமைப் பருவம் தொடர்பாக அறிந்து விளக்கிக் காட்டுவார். | • முஹம்மத் (ஸல்) அவர்கள்<br>- பிறப்பும் இளமையும் | • நபியவர்கள் பிறந்த அரபு நாட்டின் சமூக நிலையை எடுத்துக் கூறுவார்.<br>• நபியவர்களின் இளமைக்கால துயரங்களை உணர்வுபூர்வமாக எடுத்துக் கூறுவார்.<br>• இளமையிலும் நபியவர்கள் சிறந்த பண்புகளோடு வாழ்ந்து காட்டியதை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வார். | 02 |
| | 5.2<br>நபி (ஸல்) அவர்களின் இளமைக் கால முன்மாதிரிகளை விளங்கிகட கடைப்பிடிப்பார். | • முஹம்மத் (ஸல்) அவர்களின்<br>- மக்கா வாழ்க்கை | • நபியவர்களின் இளமை வாழ்வில் பங்கேற்ற மூத்தோர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• முஹம்மத் (ஸல்) அவர்களின் வாலிபப்பருவம் கழிந்த முறையை எடுத்துக் கூறுவார்.<br>• அவர்கள் ஹிறாவுக்கு சென்ற நிகழ்வையும், அதன் பெறுபேற்றையும் விளக்கிக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3<br>நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளை விளங்கிக் கடைப்பிடிப்பார். | • நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் | • அவர்களது பிரச்சார முறையையும் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களையும் எடுத்துக் கூறுவார்.<br>• மக்கா வாழ்க்கைப் பகுதியின் விளைவை எடுத்துக் கூறுவார்.<br>• முஹம்மத் (ஸல்) அவர்கள் சிறந்த மகனாக, தந்தையாக, கணவனாக, ஆசிரியராக, சீர்திருத்தவாதியாக காணப்பட்டார்கள் என்பதனை நிகழ்வுகளுக்கூடாக எடுத்துக்காட்டுவார். | 02 |
| | 5.4<br>உம்மஹாத்துல் மு:மினீன் களின் வாழ்வு முறையை அறிந்து கூறுவார். | • உம்மஹாத்துல் மு:மினீன்<br>- கதீஜா (ரழி) அவர்கள் | • அவர்களை ஒவ்வொரு துறையிலும் தமது வழிகாட்டியாக ஏற்று நடந்து காட்டுவார்.<br>• நபி (ஸல்) அவர்களுக்கும் கதீஜா (ரழி) அவர்களுக்குமிடையில் திருமணம் நிகழ்ந்த பின்னணியை எடுத்துக் கூறுவார்.<br>• நபி (ஸல்) அவர்களுக்கும் கதீஜா (ரழி) அவர்களுக்கும் கிடைத்த பிள்ளைகளின் பெயர்களை பட்டியல்படுத்துவார்.<br>• கதீஜா (ரழி) அவர்கள் இஸ்லாத்துக்குச் செய்த பணிகளை உரையாக முன்வைப்பார். | 02 |
| | | - ஆயிஷா (ரழி) அவர்கள் | • கதீஜா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி ஒழுகுவார்.<br>• நபி (ஸல்) அவர்களுக்கும் அபூபக்ர் (ரழி) அவர்களின் குடும்பத்துக்குமிடையிலான தொடர்பை எடுத்துக் கூறுவார்.<br>• ஆயிஷா (ரழி) அவர்களின் தனிச் சிறப்புகளை பட்டியற்படுத்துவார்.<br>• ஆயிஷா (ரழி) அவர்கள் இஸ்லாத்துக்குச் செய்த பணிகளை கதிஜா (ரழி) அவர்களின் பணியோடு ஒப்புநோக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.5<br>ஸஹாபாக்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார். | • ஸஹாபாக்கள் - அறிமுகம்<br>- ஸைத் பின் தாபித் (ரழி)<br>- சல்மான் அல்-பாரிசீ (ரழி) | • ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.<br>• ஸைத் இப்னு தாபித் (ரழி) அவர்களின் கற்றல் திறனையும் ஆர்வங்களையும் கண்டறிந்து கூறுவார்.<br>• அவர்களின் பங்களிப்புக்களை மதிப்பீடு செய்து விளக்கமளிப்பார்.<br>• குர்ஆனை நூலுருப்படுத்துவதில் அவரது பணியை விளக்குவார்.<br>• சமூக தேவையை அறிந்து அதற்கேற்ப செயற்படும் முறையினை அறிந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுகுவார். | 02 |
| | 5.6<br>நபி ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றைக் கதையாகக் கூறுவார். | • நபிமார்கள்- ஆதம் (அலை) | • ஆதம் (அலை) படைக்கப்பட்ட நிகழ்வைக் கூறுவார்.<br>• ஆதம் ஹவ்வா சோடி தவறிழைத்த சம்பவத்தைக் கதையாக எடுத்துக் கூறுவார்.<br>• அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரிய முறையை சொல்லிக் காட்டுவார்<br>• தவறுகளிலிருந்து பாவ மன்னிப்புக் கோரி வாழ்வார். | 02 |
| **6.0 அல்முஆமலாத்**<br>பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார். | 6.1 அயலாரின் உறவைப் பேணி நடப்பார் | • அயலார் உறவு<br>- அயலவர் பற்றிய விளக்கம்<br>- சிறப்புக்கள்<br>- உரிமைகள் | • நபி ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றைக் கூறுவார்<br>• அண்டை வீட்டார் யார் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• அண்டை அயலவரின் சிறப்புக்களை அறிந்து கண்ணியப்படுத்துவார்.<br>• அண்டை அயலவரின் உரிமைகளை மதித்து நடப்பார்.<br>• அண்டை வீட்டாருடன் நல்லுறவைப் பேணி அவர்களின் கண்ணியத்தைக் காத்து வருவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0**<br>**மபாஹிமுல் இஸ்லாமியா**<br>ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார். | 7.1<br>சுற்றாடலை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார். | • சுற்றாடல்<br>- பாதுகாத்தல்<br>- பங்களிப்புச் செய்தல் | • சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டியதற்கான காரணங்களைக் கண்டறிந்து கூறுவார்.<br>• சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• சுற்றாடலின் சுத்தத்தைப் பேணுவது பர்ழு கிபாயா என ஏற்றுச் செயற்படுவார்.<br>• சுற்றாடலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார். | 03 |
| | 7.2<br>உயிர்களிடத்தில் அன்பு காட்டுவார். | • உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>- பராமரித்தல்<br>- பாதுகாத்தல் | • உயிரினங்கள் எமது சூழலுக்கு அவசியமானவை என்பதைக் கண்டறிந்து கூறுவார்.<br>• ஸூரதுன் நஹ்லில் வந்துள்ள உயிரினங்களின் பயன்பாடு குறித்துக் கூறும் வசனங்களை ஒன்று திரட்டுவார்.<br>• உயிரினங்கள் எம்மைப் போன்றவை. அவற்றின் மேல் அன்பு செலுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• உயிரினங்களைப் பாதுகாத்துப் பராமரிப்பார். | 02 |

## 6.6 கற்றல்- கற்பித்தல் முறை

கலைத் திட்டத்தில் சமய பாடம் மிக முக்கியமானதொன்றாகும். மாணவர் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் கவர்ச்சியாகவும் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் நடைமுறை வாழ்வில் பயிற்சிக்கு வரும் விதமாகவும் அதன் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மாணவர்களது ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூக திறன் ஆகியவற்றை வளர்த்து வெளிக்கொணரும் விதமாக கற்றல்- கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

குறிப்பாக, சமய பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் மூளையை அறிவாலும் தகவல்களாலும் போஷிக்கச் செய்து பரீட்சை எழுதும் திறனை மாத்திரம் வளர்த்து விடுவது போதுமானதல்ல. மாறாக, மாணவரிடையே தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பொருத்தமான கற்றல்- கற்பித்தல் முறைகளைத் தெரிந்திருப்பது ஆசிரியரின் தலையாய பணியாகும். இதன்போது வயது, அனுபவம், சூழல், தனியாள் வேறுபாடு என்பவற்றைக் கருத்திற் கொள்வது வரவேற்கத்தக்கது.

இப்புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. எனவே, புதிய கற்றல்- கற்பித்தலில் மாணவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் விதமாக மாணவர்களது தொழிற்பாடுகள் மிகைத்துக் காணப்பட வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் தனது மாணவரது தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தித்து உற்சாகமூட்டியும் திறமைகள், ஆற்றல்களுக்கு மதிப்பளித்து பாராட்டியும் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் முறைகள் சில தரப்பட்டுள்ளன.

- கலந்துரையாடல் முறை
- பங்கேற்றுக் கற்றல் முறை
- தகவல் திரட்டும் முறை
- கதை கூறல் முறை
- விரிவுரை முறை
- குழு முறை
- செய்து காட்டல் முறை
- பாத்திரமேற்று நடிக்கும் முறை
- சிந்தனைக் கிளர்வு முறை

இவ்வாறான முறைகளுடன் பாடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான மாணவர் மைய சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது.
மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும் வகையில் இஸ்லாமிய சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், பத்திரிகை நறுக்குகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலும் கற்றலை இலகுபடுத்தி கவர்ச்சிகரமானதாக்கிக் கொள்வதற்காக கற்றல்- கற்பித்தல் சாதனங்கள், பொருத்தமான இணையத்தளம் போன்றவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்துவது உசிதமானதாகும்.

மேலும் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நடைபெறுகின்ற சமய, கலாசார நிகழ்ச்சிகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றில் மிகப் பொருத்தமானவற்றை இனங்கண்டு அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பயன்பெற வழிகாட்ட முடியும்.

எனவே, மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை ஆர்வத்தோடு கற்று முன்மாதிரிமிக்க முஸ்லிமாகவும் நாட்டுக்கு நல்ல பிரஜையாகவும் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை காத்திரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆசிரியர்கள் அமைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 6.7 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளர்ச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒரு வாழ்வு முறையாக அமைவதால் பாடசாலைச் சூழலில் மனப்பாங்கு மாற்றத்தையும் அதற்கூடாக செயற்பாட்டுச் சீர்மையையும் ஏற்படுத்துவதற்கான அறிவும் முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

- சமய, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- வெளிக்களப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து அவற்றின் மூலம் சமய, கலாசார மையங்களைத் தரிசிக்கச் செய்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- புத்தாக்க செயற்பாடுகளை உள்ளடக்கிய முஹர்ரம் புத்தாண்டை வரவேற்றல், ரமழான் மாதத்தை வரவேற்றல், மீலாத் தொடர்பான ஆக்க முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இனங்காணப்பட்ட புத்தாக்கத் திறனுள்ள மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் வளப்பங்களிப்புச் செய்யக் கூடியவர்களை வரவழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- பாடசாலைச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல், அழகுபடுத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக தனித்தனி மாணவக் குழுக்களை அமைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- தேசிய, சர்வதேச தினங்களை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல்.
- இஸ்லாமிய நடைமுறைகளின் யதார்த்தபூர்வமான உண்மைகளைப் புரியவைத்து, மாணவர்கள் அவற்றை உணர்ந்து பின்பற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேலும் குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் கால நேரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்த நேரத்திற்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாட ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பாடத்துக்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போது, இஸ்லாம் பாடத்துக்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இஸ்லாமிய ஷரீஆ கலாநிலையங்களில் தராதரம் பெற்றவர்கள், இஸ்லாமிய கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரிகள் என்போரை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவுமுள்ள, ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கின்ற, நேர்முறையாகச் சிந்திக்கின்ற, நல்ல உள்ளங்கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம்

## 6.8. கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றது. இது ஒவ்வொரு பாட வேளையிலும் இடம்பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

இஸ்லாம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார்ந்த அல்லது முறைசாராத வகைகளில் இடம்பெற முடியும்.

பாட ஆரம்பம் முதற்கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக் கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு இஸ்லாம் பாடம் தொடர்பான மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும் மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத் திட்டங்களுக்கூடாகவோ இடம்பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகள், வழிமுறைகளை நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றின் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கின்றனரா, மனனமிட்டுள்ளனரா, குறித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றனரா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களுக்குரியது மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாம் பாடத்தில் மனப்பாங்கு தொடர்பான கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் அல்குர்ஆன் ஸூறாக்கள், சந்தர்ப்ப துஆக்கள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும்போது அறபு எழுத்துக்களின் உச்சரிப்பு, நீட்டல்- குறுக்கம், மனனமிட்டிருத்தல் போன்றன அவதானிக்கப்படல் வேண்டும். கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும் மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி- தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : ஈமான் பற்றிய அடிப்படைகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- சிறந்த மு.்.மினாக வாழ்வதற்கான அடிப்படைகளை அறிந்து விளக்குவார்.
- ஈமானின் ஆறு அம்சங்களையும் நம்பி எடுத்துக் கூறுவார்.
- ஈமானின் அம்சங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புறும் விதத்தை விபரிப்பார்.
- தவ்ஹீத், றிஸாலத், மஆத் என்பவற்றில் உள்ளடங்குபவற்றை அட்டவணைப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

படி 1 :

- ஒரு மனிதன் ஐ.்.பர் ஸாதிக் (ரஹ்) அவர்களிடம் வந்தான். அல்லாஹ்வைப் பற்றி அவரிடம் கேட்டான்.

  ஐ.்.பர் ஸாதிக் (ரஹ்) : நீர் கடலில் பிரயாணம் செய்ததுண்டா?

  வந்தவர் : ஆம்

  ஐ.்.பர் ஸாதிக் (ரஹ்) : நடுக் கடலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது புயற்காற்று வீசியதுண்டா?

  வந்தவர் : ஆம்

  ஐ.்.பர் ஸாதிக் (ரஹ்) : அப்போது மாலுமிகள் உன்னைக் காப்பாற்றுவார்கள் அல்லது தப்புவதற்காக ஏதும் வழியுண்டு என்பதில் நீ நம்பிக்கை இழந்ததுண்டா?

  வந்தவர் : நடந்ததுண்டு

  ஐ.்.பர் ஸாதிக் (ரஹ்) : உன்னைக் காப்பாற்றக்கூடியவன் ஒருவன் உண்டு என்ற ஓர் எண்ணம் உன் உள்ளத்தில் தோன்றியதுண்டா?

  வந்தவர் : ஆம்

  ஐ.்.பர் ஸாதிக் (ரஹ்) : அவனே அல்லாஹ் (நூல் இஸ்லாமிய அகீதாவில் அல்லாஹ்)

  இந்த உரையாடலை வாசித்துக் காட்டி மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.

- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:

  - ஈமான் கொள்ள வேண்டிய ஆறு விடயங்கள் காணப்படுகின்றன. அதில் முதன்மையானது அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதாகும். ஈமான் கொள்ள வேண்டிய ஆறு அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகின்றன. ஆறு அம்சங்களையும் நம்பிக்கை கொள்ளும் போதுதான் எமது ஈமான் பூரணமடைகிறது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும்

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய அறிக்கையை முன்வைக்க இடமளியுங்கள்.
- போஷிக்கத்தக்க விடயங்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - ஈமான் கொள்ள வேண்டிய ஆறு அம்சங்கள்: அல்லாஹ்வை நம்புதல், அவனது மலக்குகளை நம்புதல், அவனது வேதங்களை நம்புதல், அவனது தூதர்களை நம்புதல், மறுமை நாளை நம்புதல், கழா கத்ரை நம்புதல் என்பனவாகும்.

    أمنت بالله وملائكته وكتبه ورسله واليوم الآخر والقدر خيره وشره
  - இவற்றில் அல்லாஹ்வை நம்புவதுதான் அனைத்திலும் முதன்மையானதாகும்.
  - ஏனைய படைப்பினங்களை விடவும் எம்மை உயர்ந்த படைப்பாக படைத்து பரிபாலிப்பவன் அல்லாஹ் ஒருவனே.
  - நாம் அல்லாஹ் மீது பலமான நம்பிக்கை கொள்வது எமது கடமையாகும்.
  - உள்ளத்தில் ஆழமான ஈமான் இருக்கும்போது அது நடத்தையில் பிரதிபலிக்கும்.
  - ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களில் ஏதாவது ஒன்றை நிராகரித்தாலும் ஈமான் பூரணமடையாது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1, குழு-2: أمنت بالله وملائكته وكتبه ورسله واليوم الآخر والقدر خيره وشره என்பதை அரபு எழுத்தணி வடிவமொன்றில் எழுதிக்காட்டுங்கள்.

குழு-3, குழு-4: أمنت بالله وملائكته وكتبه ورسله واليوم الآخر والقدر خيره وشره என்ற அரபுத் தொடரை மொழிபெயர்த்து எழுதி அதனைக் காட்சிப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

أمنت بالله என ஆரம்பிக்கும் தொடரை பெற்றோரின் வழிகாட்டலுடன் எழுத்தணி வடிவில் அமைத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 1.2.1 : அல்லாஹ் படைப்பாளன் என்பதை விளக்கிக் கூறுவார்.

பாடவேளை : 1

**கற்றல் பேறுகள்:**

- மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்பதை அறிந்து கூறுவார்.
- படைப்பாற்றலின் மூலம் வெளிப்படும் அல்லாஹ்வின் பண்புகளை புகழ்ந்து கூறுவார்.
- மனிதன் ஆற்ற வேண்டிய பணிகளையும் பொறுப்புக்களையும் தம்முடைய வாழ்வில் எடுத்து நடப்பார்.
- ஏனைய படைப்புக்களில் அல்லாஹ்வின் அத்தாட்சியைக் காண்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இலுள்ள வரலாற்றுச் சம்பவத்தை வாசித்துக் காட்டுங்கள்.
- அல்லாஹ்வின் வல்லமை பற்றி சுருக்கமாக விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
    - இவ்வுலகை படைத்து பரிபாலனம் செய்யும் ஆற்றல் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. அவனே இவ்வுலகில் மனிதனையும் ஏனைய உயிரினங்களையும் படைத்தவன். மனிதனை அல்லாஹ் ஏனைய உயிரினங்களை விடவும் உயர்ந்த அந்தஸ்தில் படைத்துள்ளான். மனிதனுக்குப் பகுத்தறிவை வழங்கியதன் ஊடாக உலகின் ஏனைய படைப்பினங்களை விட்டும் மனிதனை மேன்மைப்படுத்திக் காட்டி யிருக்கிறான். எனவே இவ்வுலகில் மனிதன் அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரமே தன்னுடைய வாழ்வை அமைத்துக்கொள்வது கடமயாகும். அதுவே மனிதனின் இம்மை மறுமை வெற்றிக்கு காரணமாய் அமையும்.

படி 2 :
- மாணவர்களை குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - அனைத்து படைப்புக்களையும் உருவாக்கியவன் அல்லாஹ். அவை ஒவ்வொன்றிலும் பாரிய திட்டமிடலும் நுணுக்கங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு படைப்பினமும் இடம், சூழல், பருவ காலம் என்பதற்கு ஏற்ப படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான படைப்புக்களில் மனிதன் ஏனைய படைப்பினங்களை விடவும் அல்லாஹ்விடம் சிரேஷ்ட படைப்பாக கருதப்படுகிறான்.

- எனவேதான் அல்குர்ஆன் மனிதனை அல்லாஹ்வின் பிரதிநிதி எனக் குறிப்பிடுகிறது. அல்லாஹ்வின் பிரதிநிதியாகிய மனிதன் இவ்வுலகில் மேற்கொள்ள வேண்டிய பணிகளும் பொறுப்புக்களும் கடமைகளும் காணப்படுகின்றன. அவற்றை அல்குர்ஆன், ஹதீஸ் என்பன தெளிவுபடுத்துகின்றன. உலகை வளப்படுத்துவதை தன்னுடைய பொறுப்புக்களில் ஒன்றாக செய்யும் மனிதன் இவ்வுலகின் ஏனைய உயிரினங்களையும் தன்னுடைய தேவைகளுக்காக உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பமளிக்கப்பட்டிருக்கிறான்.
- மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் தன்னுடைய பொறுப்புக்களை செய்கின்றபோதே இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவான்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**(இணைப்பு -1)**

**தகவல் கோவை**

நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் ஓர் அன்சாரியின் தோட்டத்தில் நுழைந்தார்கள். அங்கு ஓர் ஒட்டகம் கட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த ஒட்டகம் அண்ணலாரைப் பார்த்தவுடன் வேதனை நிரம்பிய குரலில் கனைத்தது. இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. அண்ணலார் அருகில் சென்று பரிவுடன் அதன் தலையையும் நெற்றியையும் தமது கரங்களினால் தடவினார்கள். உடனே அது அமைதியடைந்தது. இந்த ஒட்டகத்தின் எஜமான் யார்? இந்த ஒட்டகம் யாருடையது? என அண்ணலார் வினவினார்கள். அப்போது ஓர் அன்சாரி இளைஞர் "அல்லாஹ்வின் தூதரே இந்த ஒட்டகம் என்னுடையது" என்று கூறினார். அப்போது உமது அதிகாரத்தில் ஒப்படைத்திருக்கும் இந்த வாயில்லாப் பிராணியைக் குறித்து நீர் அல்லாஹ்வுக்கு அஞ்சவில்லையா? இந்த ஒட்டகம் கண்ணீர் மற்றும் வேதனை வாயிலாக நீர் அதனை பசியோடு வைத்திருந்து தொடர்ந்து வேலை வாங்குவதாக என்னிடம் முறையிட்டுக் கொண்டிருந்தது" என நபியவர்கள் கூறினார்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக படைக்கப்பட்ட மனிதன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பத்தினை எழுதிக் காட்டுங்கள்.

குழு-2 மனிதன் மேற்கொள்ள வேண்டிய பணிகளைச் செய்வதற்கு தவறும்போது உலகில் ஏற்படும் பாதிப்புக்களை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-3 மனிதனுக்கு ஏனைய உயிரினங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் சிலவற்றை தொகுத்து எழுதுங்கள்.

குழு-4 மனிதன் இவ்வுலகில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக இஸ்லாம் கூறும் இரண்டு ஹதீஸ்களை எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு - வீட்டில்**

சூழலில் காணப்படும் உயிரினம் ஒன்றைத் தெரிவுசெய்து அது பற்றி அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள வசனங்கள் இரண்டை பொருளுடன் காட்சிப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2.2 : அல்லாஹ் படைப்பாளன் என்பதை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அல்லாஹ்வின் படைப்புக்களை அவதானித்து அவனது வல்லமைகளை எடுத்துக் கூறுவார்.
- படைப்பினங்களில் காணப்படும் நன்மைகளை பட்டியல்படுத்துவார்.
- படைப்பினங்களை அவதானிப்பதன் மூலம் ஈமானைப் பலப்படுத்தி வாழ்ந்து காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இலுள்ள ஒட்டகம் பற்றிய தகவல்களை வாசித்துக் காட்டுங்கள்.
- அல்லாஹ்வின் படைப்பாற்றல் பற்றிய விளக்கத்தை சுருக்கமாக வழங்குங்கள்.
- சூழலில் உள்ள சில படைப்பினங்களை (நீர், பறவைகள், மிருகங்கள்) அவற்றின் சிறப்புக்கள், படைப்பின் நுணுக்கங்கள் என்பன பற்றி வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தியதாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - அல்லாஹ் எமது புலன்களுக்கு அப்பாற்பட்டவன். இவ்வுலகை படைத்து பரிபாலிக்கும் சக்தி அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. அவன் முன்மாதிரியின்றி அனைத்தையும் படைப்பவன்.
    - அல்குர்ஆன், ஹதீஸ் விளக்கங்கள் மூலமும் அவனது படைப்பினங்களின் நுணுக்கங்கள் மூலமும் அவனை அறிந்து கொள்ள முடியும். பரந்து விரிந்த உலகின் அனைத்து படைப்புக்களும் அவனது சக்தியின் மூலமே உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப்பினத்தின் உருவாக்கத்திலும் செயற்பாட்டிலும் அவனுடைய படைப்பின் அதிசயத்தை கண்டு கொள்ளலாம்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க மேலதிக விடயங்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - அனைத்து படைப்புக்களையும் உருவாக்கியவன் அல்லாஹ்வே.
  - அவை ஒவ்வொன்றிலும் பாரிய திட்டமிடலும் நுணுக்கங்களும் காணப்படுகின்றன.
  - ஒவ்வொரு படைப்பிலிருந்தும் மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் காணப்படுகின்றன.
  - படைப்பினங்களை அவதானிக்கும் போது எமக்கு அல்லாஹ்வின் ஆற்றல், சக்தி என்பவற்றை உணர்ந்து கொள்ளலாம்.

**(இணைப்பு 1)**

**தகவல் கோவை:**

ஒட்டகம் பாலைவனப் பகுதியில் வாழும் ஓர் உயிரினம் ஆகும். அதற்கு பாலைவனக் கப்பல் என்ற சிறப்பு பெயர் உண்டு. கப்பல் சமுத்திரத்தில் பொருட்களையும் பயணிகளையும் சுமந்து கொண்டு செல்லும் ஒரு வாகனமாகும். அது நீரில் மிதந்து செல்வதற்கு ஏற்ற விதத்திலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது பாலைவன சுவாத்தியங்களுக்கு ஏற்ப படைக்கப்பட்டுள்ள ஒரு படைப்பாகும். எனவேதான் அது பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுகிறது. ஓட்டகம் 250- 680 கிலோ நிறை வரை அதிகரிக்கக் கூடியது. 50 வருடத்திற்கு மேல் ஆயுளைக் கொண்டது மட்டுமல்ல, பல நாட்கள், பல மாதங்கள் நீரில்லாமலும் உணவில்லாமலும் பாலைவனத்தில் பிரயாணம் செய்யக் கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளது. நீர் கிடைக்கும்போது பத்து நிமிடத்திற்குள் தன்னுடைய உடம்பில் மூன்றில் ஒரு பகுதியை நிரப்பிக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டது.

அது ஒரு தடவையில் 150 லீற்றருக்கு மேல் நீரைக் குடித்து சேமித்துக் கொள்ளும். ஒட்டகத்தின் உரோமம், தோல் என்பன கடுமையான வெப்பத்தை தாங்கும் சக்தியைக் கொண்டது. அதனுடைய கண்கள் இரண்டிலும் தூசி விழுந்துவிடாமல் இருப்பதற்கு கண்களுக்கு மேலால் படை காணப்படுகிறது. பாதங்கள் கூட அகன்ற அமைப்பில் காணப்படுகின்றன. அதனால்தான் அது பாலைவன மணலில் புதைந்து விடாமல் வேகமாகச் செல்கின்றது. எனவேதான் அல்குர்ஆன் ஒட்டகத்தின் அதிசயத்தைப் பற்றி அவதானிக்குமாறு ஸூரதுல் காசியாவில் குறிப்பிட்டுள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** ஆமையிடம் காணப்படும் படைப்பு நுட்பங்களை எழுதுங்கள்.

**குழு-02** மரங்கொத்தியிடம் காணப்படும் படைப்பு நுட்பங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு-03** தும்பியில் காணப்படும் படைப்பு நுட்பங்களை தேடியறிந்து எழுதுங்கள்.

**குழு-04** அல்லாஹ் முயலில் வைத்திருக்கும் படைப்பு நுட்பங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

சூழலில் காணப்படும் உயிரினம் ஒன்றைத் தெரிவுசெய்து அது பற்றி அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள வசனங்கள் இரண்டை பொருளுடன் காட்சிப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 1.2.3 : அல்லாஹ் படைப்பாளன் என்பதை விளக்கிக் கூறுவார்.

பாடவேளை : 2

கற்றல் பேறுகள்:

- மலக்குகளினதும் ஜின்களினதும் வேறுபாட்டை விளக்கிக் கூறுவார்.
- முக்கியமான 10 மலக்குகளின் பெயர்களையும் அவர்களின் பணிகளையும் அறிந்து கூறுவார்.
- மலக்குகளும் ஜின்களும் அல்லாஹ்வின் ஏனைய படைப்புகளிருந்து வேறுபடும் விதத்தை அறிந்து எழுதிக் காட்டுவார்.

பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

படி 1 :

- ஒரு நாள் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் நாங்கள் அமர்ந்திருந்த பொழுது மிகக் கருமையான முடியுடைய தூயவெண்ணிற ஆடை அணிந்த ஒருவர் எங்களிடம் வந்தார். அவரிடம் பிரயாணத்தின் அடையாளம் எதுவும் காணப்படவில்லை. எங்களில் எவரும் அவரை அறிந்திருக்கவுமில்லை. அவர் நபி (ஸல்) அவர்களின் அருகில் சென்று அமர்ந்தார். தனது இரு முட்டுக்கால்களையும் அவர்களின் முட்டுக்கால்களுடன் சேர்த்து வைத்தார். தனது இரு கரங்களையும் தமது இரு தொடைகளில் வைத்தார். அவர் நபி (ஸல்) அவர்களை நோக்கி “முஹம்மதே! இஸ்லாத்தைப் பற்றி எனக்கு கற்றுத் தாருங்கள்” என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் திருத்தூதர் என்று நீர் சாட்சி பகர்வதும், தொழுகையை நிலை நாட்டுவதும், ஸகாத் கொடுப்பதும், ரமழானில் நோன்பு நோற்பதும், சக்தி பெற்றிருந்தால் ஹஜ் செய்வதும் இஸ்லாமாகும்” எனக் கூறினார்கள். அதற்கு அவர் “உண்மை உரைத்தீர்” என்றார். பின்னர் அவர், “எனக்கு ஈமானைப் பற்றி கற்றுத் தாருங்கள்” என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “நீர் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் வேதங்களையும் திருத்தூதர்களையும் மறுமை நாளையும், விதியையும் நம்பிக்கைக் கொள்வதுதான்” ஈமான் எனக் கூறினார்கள். அதற்கவர் “உண்மை உரைத்தீர்” என்றார். பின்னர் “இஹ்ஸான் என்றால் என்ன?” என்று வினவ “அல்லாஹ்வை நீர் பார்ப்பது போல் பயபக்தியுடன் வணங்க வேண்டும். நீர் அவனைப் பார்க்கா விட்டாலும் அவன் உம்மைப் பார்க்கிறான் என்ற உணர்வோடு வணங்க வேண்டும். இதுவே இஹ்ஸான் ஆகும்” எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

  இந்த ஹதீஸை மாணவர் ஒருவர் மூலம் வாசிக்கச் செய்து, மலக்குகள் தொடர்பாக மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - மலக்குகள், ஜின்கள் நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. மலக்குகள் ஒளியினாலும், ஜின்கள் நெருப்பினாலும் படைக்கப்பட்டுள்ளனர். மலக்குகளில் பால் வேறுபாடு இல்லை; குடும்பம், பசி, தாகம் போன்ற தேவைகளும் ஏற்படுவதில்லை. ஈமான் கொண்ட ஜின்களும், காபிரான ஜின்களும் உலகில் காணப்படுகின்றனர்.

படி 2 : ● மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

● கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

● மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : ● ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

● போஷிக்கத்தக்க மேலதிகமான விடயங்களை ஏனைய குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

● பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

  ● உலகிலுள்ளவற்றுள் பல, நமது கண்களுக்குப் புலப்படாதவை போல மலக்குகளும், ஜின்களும் நமது புலன்களுக்குப் புலப்படாதவர்கள் ஆவர். மலக்குகள் ஒளியினாலும் ஜின்கள் நெருப்பினாலும் படைக்கப்பட்டவர்கள். எமக்குப் புலப்படுபவை தவிர புலப்படாதவற்றிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும். இவை பற்றி அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது.

  ● மலக்குகள் பாவம் செய்யும் இயல்பு அற்றவர்கள். இறை கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றுபவர்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ் மட்டுமே அறிவான். மனிதர்களைப் போன்றே ஜின்களும் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டும் சிலபோது கட்டுப்படாமலும் செயற்படும் இயல்பினைக் கொண்டவர்கள்.

  ● மலக்குகள் அல்லாஹ் வழங்கிய பொறுப்புக்களை குறை ஏதுமின்றி நிறைவேற்றுபவர்கள், ஜின்களில் இதற்கு மாறு செய்பவர்கள் உண்டு. முக்கியமான மலக்குகள் பதின்மர் ஆவர். அவர்களையும் அவர்களது விசேட பணிகளையும் நம்பி ஒழுகுவது ஈமானின் ஓர் அம்சமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

● பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

● கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 மலக்குகளின் இயல்புகளை பட்டியல்படுத்துங்கள்.

குழு-2 மலக்குகள் பதின்மரின் பெயர்களையும் அவர்களின் பணிகளையும் எழுதுங்கள்.

குழு-3 மலக்குகளையும் ஜின்களையும் நாம் ஏன் விசுவாசம் கொள்ள வேண்டும் என எழுதுங்கள்.

குழு-4 ஜின்கள் தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் இரண்டினைத் தெரிந்தெடுத்து அவற்றின் மொழிபெயர்ப்பை எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

புலன்களுக்கு அப்பாற்பட்ட பொருள்கள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி அவற்றைப் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2.4 : அல்லாஹ் படைப்பாளன் என்பதை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 1**

**கற்றல் பேறுகள்:**

- பௌதிக படைப்புக்களை வகைப்படுத்திக் கூறுவார்.
- பௌதிக படைப்புக்கள் அல்லாஹ்வின் அருள் என்பதை எடுத்துக் காட்டுவார்.
- பௌதிக படைப்புக்களின் நன்மைகளை அறிந்து எழுதிக் காட்டுவார்.
- பௌதிக படைப்புக்களை முறையாக பேணிப் பாதுகாத்து வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இல் உள்ளவற்றை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- சூழலில் காணப்படும் பௌதிக வளங்கள் பற்றி மாணவர்களிடம் வினவுங்கள்.
- பௌதிக வளங்களால் பெறப்படும் நன்மைகள் சிலவற்றை கேட்டறியுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - எமது சூழலில் பல்வேறு பௌதிக படைப்புக்கள் காணப்படுகின்றன.
  - காற்று, மலை, மண், பாறைகள், நிலம், நீர், தாவரங்கள்... முதலியன அவற்றில் சிலவாகும். அவை ஒவ்வொன்றிலும் அதிகமான நன்மைகள் காணப்படுகின்றன. ஏனைய படைப்புகள் போன்றே பௌதிக படைப்புக்கள் ஒவ்வொன்றும் அல்லாஹ்வினால் திட்டமிட்ட அமைப்பில் படைக்கப்பட்டுள்ளன.
  - பௌதிக படைப்புக்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் தொடர்புபட்ட விடயங்களையும் அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - பௌதிக படைப்புக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அருள்களாகும். படைப்புக்கள் அனைத்திலும் நன்மைகள் காணப்படுகின்றன. அல்லாஹ்வின் வல்லமை, சக்தி என்பவற்றை பௌதிக படைப்பினங்

களின் திட்டமிட்ட உருவாக்கங்களின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

- மனிதனின் வாழ்க்கை நிலைப்பிற்கு பௌதிக படைப்புக்களில் தங்கியிருப்பது கட்டாயமாகிறது. பௌதிக படைப்புக்கள் அல்லாஹ்வினால் நமக்களிக்கப்பட்ட அமானிதங்களாகும். அவை பற்றி மறுமையில் விசாரிக்கப்படும்.
- அவற்றை துஷ்பிரயோகம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். பௌதிக படைப்புக்களை பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**(இணைப்பு -1)**

**தகவல் கோவை**

சூரியன் பூமியிலிந்து 9,30,00,000 மைல் தூரத்தில் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதன் வெப்பத்தின் அளவு 12000 பாகை செல்சியஸ் ஆகும். சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் இப்போது இருப்பதில் பாதியே இருக்கிறது என வைத்துக் கொள்வோம், அந்நிலையில் நாம் தாங்க முடியாத சூட்டினால் கருகிவிடுவோம். மாறாக சூரியன் இன்னும் கொஞ்சம் அதிக தொலைவில் அமைந்திருக்குமேயானால் இந்த பூமி நாம் வாழ முடியாத அளவிற்குக் குளிர்ச்சியுடையதாய் இருந்திருக்கும்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 பூமி பற்றி அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனில் கண்டறிந்து பொருளுடன் எழுதுங்கள்.

குழு-2 வானம் பற்றி அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனின் உதவியுடன் பொருளுடன் எழுதுங்கள்.

குழு-3 கடல், நீர் நிலைகள் தொடர்பாக அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வசனங்களின் பொருளை தர்ஜமதுல் குர்ஆனின் துணையுடன் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-4 உயிரினங்கள், தாவரங்கள் பற்றி அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனின் துணையுடன் கண்டறிந்து பொருளுடன் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அல்லாஹ்வின் படைப்புக்கள் மற்றும் அதன் நுணுக்கங்கள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி அவற்றைப் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள் அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1.1 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை ஆதாரத்துடன் அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 1**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாம் என்பதன் சொல் விளக்கத்தை கூறுவார்.
- பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுகின்றன என்பதை விளக்குவார்.
- அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதன் மூலமே சாந்தியும் சமாதானமும் உருவாகும் என்பதை ஏற்று நடைமுறைப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- أَفَغَيْر دِيْن اللهِ يَبْغُوْنَ ولَه **أسْلَمَ** منْ فِيْ السماَواتِ والأَرْضِ طَوْعاً وَكَرْهاً واليْهِ يَرْجِعُوْن.

  “அல்லாஹ்வுடைய மார்க்கத்தை அன்றி வேறு மார்க்கத்தையா விரும்புகின்றார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்துமே (அவை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. அன்றி (அவையனைத்தும்) அவன் பக்கமே திரும்பக் கொண்டு வரப்படும்.” (3: 86) என்ற அல்குர்ஆன் வசனத்தை ஓதி அதன் பொருளை வாசிக்க வைத்து தரப்பட்டுள்ள வினாக்களைக் கொடுத்து ஓதப்பட்ட அல்குர்ஆன் வசனத்தினூடாக விடையளிக்க சொல்லுங்கள்.
- أَسْلَمَ – إِسْلاَم ஆகிய இரு சொற்களினதும் சொல்லர்த்தத்தை தெளிவுபடுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கமாகும். அல்லாஹ்வின் சட்டங்களுக்கு கட்டுப்படுவதே இஸ்லாம் ஆகும்.
  - நாம் அல்லாஹ்வுக்கு விரும்பிக் கட்டுப்படுகின்றோம் என்பதை வெளிக் காட்டும் அம்சங்களாகவே வணக்க வழிபாடுகள் காணப்படுகின்றன. இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகள் மூலம் எமக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் உள்ள உறவை வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

**படி 2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடி கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவினருக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்க சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாம் என்ற அரபுச்சொல் இரு பிரதான கருத்துக்களைக் கொண்டுள்ளது.

      - سَلاَمٌ சாந்தி - أَسْلَمَ கட்டுப்படுதல்

    - கட்டுப்படுதல் என்ற கருத்தின்படி அல்லாஹ்வின் படைப்புக்களாகிய பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கும் அவனது சட்டங்களுக்கும் விரும்பியோ விரும்பாமலோ கட்டுப்படுகின்றன.
    - சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள் போன்றவற்றின் செயற் பாடுகளும், மழை பெய்வதும், காற்று வீசுவதும், கடலலை எழுவதும், மரம் வளர்வதும், நெருப்பு எரிவதும்... இவை போன்ற அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிவதன் விளைவுகளாகும்.
    - "வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தும் விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடக்கின்றன."(2: 86)
    - அல்லாஹ்வின் படைப்புக்களுள் மனிதன் தெரிவுச் சுதந்திரம் வழங்கப்பட்டவன் என்ற வகையில், அல்லாஹ்வுக்கு அடிபணிவதில் அவனுக்குள்ள விருப்பத்தை அறியும் நோக்கில், அவனுக்கென்று பிரத்தியேக சட்டங்களை விதியாக்கியுள்ளான். அல்லாஹ்வின் சட்டங்களை விரும்பி ஏற்று பின்பற்றுபவனே முஸ்லிமாவான்.
    - நபி (ஸல்) அவர்கள் "இஸ்லாம் ஐந்து தூண்கள் மேல் கட்டி எழுப்பப்பட்டுள்ளது" என்றார்கள்.
    - இஸ்லாம் அல்லாஹ்வின் மார்க்கம் என்பதும் இயற்கை மார்க்கம் என்பதும் அதன் சிறப்பம்சமாகும்.
    - இஸ்லாம் முழு வாழ்க்கைக்கும், அனைத்து மனிதர்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் ஏற்ற மார்க்கமாகத் திகழ்கின்றமை அதன் மற்றொரு சிறப்பம்சமாகும். அல்குர்ஆனும் ஸுன்னாவுமே இஸ்லாத்தின் மூலாதாரமாகத் திகழ்கின்றன. இஸ்லாம் நேர்மை, உண்மை, நீதி, நம்பிக்கை போன்ற நற்பண்புகளை போதிக்கின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 இஸ்லாம் பற்றிக் கூறும் மூன்று குர்ஆன் வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனிலிருந்து தெரிந்தெடுத்து எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

குழு-2 விரும்பியோ விரும்பாமலோ அனைத்தும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுகின்றன என்பதற்கு ஐந்து உதாரணங்களை எடுத்துக்காட்டிப் படங்களைச் சேகரித்து காட்சிப்படுத்துங்கள்.

குழு-3 இஸ்லாத்தின் மூலம் அமைதி கிடைத்தது என்று கூறும், இஸ்லாத்தை ஏற்ற அறிஞர்கள் இருவரின் கருத்தைத் தொகுத்து ஏடு ஒன்றைத் தயாரியுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் ஐந்தை பெற்றோரின் உதவியுடன் எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள் அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1.2 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை ஆதாரத்துடன் அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 1**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாத்தின் பிரதான கடமைகளை எடுத்துக் கூறுவார்.
- இஸ்லாத்தின் கடமைகளுக்கான ஹதீஸ் ஆதாரங்களை எடுத்துக் காட்டுவார்.
- ஐம்பெரும் கடமைகளின் தொடர்பை தர்க்க ரீதியாக எடுத்துக் காட்டுவார்.
- இஸ்லாத்தின் கடமைகளை முடியுமானவரை பேணி நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இஸ்லாம் ஐந்து தூண்கள் மீது கட்டப்பட்டுள்ளது. அல்லாஹ்வைத் தவிர வேறு இலாஹ் இல்லை. முஹம்மத் நபியவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் என்று சாட்சி கூறுதல். தொழுகையை நிலை நாட்டுதல். ஸகாத்தைக் கொடுத்து வருதல். ரமழான் மாதம் நோன்பு நோற்றல். ஹஜ் செய்தல். (புகாரி) என்ற நபிமொழியை வாசித்துக் காட்டுங்கள்.
- இஸ்லாத்தின் கடமைகள் பற்றி மேலோட்டமாக வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
    - இஸ்லாத்தின் பிரதானமான கடமைகள் ஐந்து. இக்கடமைகளை நிறைவேற்றுபவன் முஸ்லிம் எனக் கருதப்படுகின்றான்.
    - கலிமாவை ஏற்றபின், தொழுகை அனைவர் மீதும், நோன்பு தகுதியுடையவர் மீதும், ஸகாத் குறித்த தொகை செல்வத்தையுடையவர் மீதும், ஹஜ் சக்திபெற்ற அனைவர் மீதும் கடமையாகும்.
    - இஸ்லாத்தின் கடமைகள் பற்றி ஹதீஸ்கள் விளக்குகின்றன.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது செயற்பாட்டை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:

- இஸ்லாத்தின் கடமைகளுள் தொழுகை மிகவும் பிரதானமானதாகும். தொழுகையின் முக்கியத்துவம் பற்றியும் சிறப்புக்கள் பற்றியும் ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன.

- “காபிருக்கும் மு:ஃமின்களுக்குமிடையிலுள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும்.” (புகாரி)
- ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். “ஐந்து நேரத் தொழுகைக்கு உதாரணம், உங்களது வீட்டுக்கு முன்னால் பெருக்கெடுத்து ஓடும் நதியில் நீங்கள் ஒவ்வொரு நாளும் ஐந்து முறை குளித்து சுத்தம் செய்வது போன்றதாகும்.” (முஸ்லிம்)
- இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் “என்னை சுவர்க்கத்தில் நுழைவிக்கும் ஓர் அமலைச் சொல்லித் தாருங்கள்” என்றார். அதற்கு நபியவர்கள் அல்லாஹ்வை வணங்குங்கள், அவனுக்கு இணைவைக்க வேண்டாம், “தொழுகையை நிலை நாட்டுங்கள், ஸக்காத்தை கொடுத்து வாருங்கள், குடும்ப உறவைப் பேணி நடவுங்கள்” என்று பதில் கூறினார்கள். (புகாரி)
- அபூ ஸஈத் அல்குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள் “ரமழான் மாதம் வந்து விட்டால் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படும். நரகின் வாயில்கள் மூடப்படும். ஷைத்தான்கள் விலங்கிடப்படும். (புகாரி)
- அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், “அல்லாஹ்வின் தூதரிடம் வினவப்பட்டது. “எந்தச் செயல் மிகவும் சிறந்தது?” அதற்கு “அல்லாஹ்வையும் தூதரையும் விசுவாசம் கொள்வது” என்று பதில் கூறினார்கள். பின்னர் எது எனக் கேட்டதற்கு “அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வது” என்றார்கள். பின்னர் எது எனக் கேட்டதற்கு “அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்” என்றார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 இஸ்லாம் ஐந்து தூண்கள் மேல் கட்டப்பட்டுள்ளதென்பதை சித்தரிக்கும் ஒரு படத்தை வரைந்து காட்டுங்கள்.

குழு-2 தொழுகையின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் மூன்று ஹதீஸ்களை எழுதுங்கள்.

குழு-3 தொழுகையில் இருந்து ஸகாத்தைப் பிரிக்க முடியாது என்ற அபூபக்ர் (ரழி) அவர்களின் கூற்று வெளியான சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக எழுதிக் காட்டுங்கள்.

குழு-4 நோன்பு நோற்ற ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் பற்றிக் கூறும் முழுமையான ஒரு ஹதீஸை ரியாழுஸ் ஸாலிஹீனில் தேடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்**

இஸ்லாத்தின் பிரதான கடமைகளை நிறைவேற்றுவதன் அவசியம் பற்றியும் அவை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பது பற்றியும் பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைத் தொகுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 :** **இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள் அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2.1 :** **தொழுகையின் முன்னாயத்தங்களை அறிந்து அவற்றை நிறைவேற்றி வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாம் சுத்தத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவார்.
- வுழுவின் பர்ழுகள், சுன்னத்துக்களை பட்டியற்படுத்துவார்.
- எப்போதும் வுழுவுடன் இருந்து வருவார்.
- பிழையில்லாமல் வுழுச் செய்து காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- “நிச்சயமாக அல்லாஹ் தவ்பாச் செய்வோரையும் பரிசுத்தவான்களையும் விரும்புகின்றான்” (2: 222) என்ற அல்குர்ஆன் வசனத்தை வாசிக்கச் செய்யுங்கள்.
- சுத்தம் பற்றி மாணவர்களின் அனுபவங்களை வெளிப்படுத்த சந்தர்ப்ப மளியுங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாம் சுத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது. உள்ளும் புறமும் சுத்தமாக இருக்க வேண்டும். தொழுகை போன்ற வணக்கங்களை நிறைவேற்றும்போது நாம் பரிசுத்தமானவர்களாக இருக்க வேண்டும்.
  - சுத்தம் செய்வதற்கு நீர் பயன்படுத்தப்படுகிறது. விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மண்ணைப் பயன்படுத்துவதற்கு அனுமதியுண்டு.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடி கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவுக்கு ஆக்கபூர்வமான மேலதிகமான கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - “சுத்தம் ஈமானின் பகுதியாகும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)
  - “நிச்சயமாக அல்லாஹ் தவ்பாச் செய்வோரையும் பரிசுத்தவான் களையும் விரும்புகின்றான்” (2: 222)

- இஸ்லாத்தில் சுத்தம் மூன்று கோணங்களில் நோக்கப்படுகின்றது.- அகச் சுத்தம்-புறச் சுத்தம்- ஆன்மீக சுத்தம்.
- பாவங்களை நினைக்காது, மற்றவர்களைப் பற்றி தப்பெண்ணங் கொள்ளாது உள்ளத்தை தூய்மையாக வைப்பதே அகச்சுத்தமாகும். தௌபா, இஸ்தி:.பார் மூலம் நாம் எப்போதும் அகச்சுத்தம் பேண வேண்டும். அகச்சுத்தம் மூலம் உள ஆரோக்கியம் பெறுவோம்.
- உடல், உடை, இடம், உணவு போன்றவற்றில் பேணும் சுத்தம் புறச்சுத்தமாகும். அசுத்தமானவை, நஜீஸானவை போன்றவற்றில் இருந்து எமது புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மலசலம் கழித்தபின் கழுவுதல், நகம் முடி வெட்டுதல், குளித்தல், சுற்றாடலை சுத்தமாக வைத்தல், நஜீஸ் என்று இஸ்லாம் அடையாளப் படுத்தியவற்றில் இருந்து அது கூறும் வழிமுறை பேணி சுத்தம் செய்தல் மூலம் புறச்சுத்தம் பேண வேண்டும். புறச்சுத்தம் பேணுதல் மூலம் நாம் உடல் ஆரோக்கியம் பெறுவோம்.
- ஆன்மீக பெறுமானங் கொண்ட உடற்சுத்தம் என்பது தொழுகை போன்ற வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்காக எம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் நோக்கில் செய்யப்படும் வுழு முதலானவற்றைக் குறிக்கும்.
- வுழூ ஏற்றுக் கொள்ளப்பட புறச்சுத்தம் பேணப்பட்டிருக்க வேண்டும். கடமையான தொழுகை, ஹஜ்ஜின் கிரியைகள் போன்றவற்றிற்கு வுழூச் செய்து கொள்ளல் கட்டாய நிபந்தனையாகும். ஏனைய சந்தர்ப்பங்களிலும் வுழு உடன் இருப்பது சுன்னத்தான அம்சமாகும். வுழூச் செய்ய சுத்தமான நீர் அவசியமாகும். வுழூவுக்கு பர்ழுகளும் ஸுன்னத்துக்களும் இருக்கின்றன. வுழூ செய்வதற்கு அவசியமான நீர் இல்லாதபோது அல்லது நீரை உபயோக்கிக்க முடியாதபோது அதற்குப்பதிலாக தயம்மம் செய்து கொள்ளலாம். வுழூவை முறிக்கும் காரியங்கள் முப்திலாத்துல் வுழு எனப்படுகின்றன.
- வுழு தயம்மும் முதலானவற்றைப் பிரயோக ரீதியாக விளக்க வீடியோ காட்சியைப் பயன்படுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 வுழுவின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் மூன்று ஹதீஸ்களைத் தேடி எழுதுங்கள்.

குழு-2 வுழுவுடன் செய்யப்பட வேண்டிய பர்ளான, சுன்னத்தான அமல்களைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-3 வுழுவின் பர்ளுகளையும் சுன்னத்துக்களையும் முப்திலாத்துக்களையும் பட்டியற்படுத்துங்கள்.

குழு-4 பூரணமான முறையில் வுழுவையும் தயம்மமையும் செய்து காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தினமும் உழுவுடன் சுத்தமாக இருக்கவும் சரியான முறையில் உழுச் செய்யவும் பயிற்றுவியுங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள் அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2.2 : தொழுகையின் முன்னாயத்தங்களை அறிந்து அவற்றை நிறைவேற்றி வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நஜீஸின் வகைகளைக் கண்டறிந்து கூறுவார்.
- திரவ வகைகளை தஹுூர், தாஹிர், நஜீஸ் என வகைப்படுத்துவார்.
- எப்போதும் உடல், உடை, வாழும் இடம் ஆகியவற்றில் சுத்தம் பேணி நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு நாள் ஒரு நாட்டுப்புற அரபி பள்ளிவாசலினுள் சிறுநீர் கழித்து விட்டார். இதனைக்கண்ட நபித் தோழர்கள் அம்மனிதரை அடிப்பதற்காக எழுந்தனர். இதனைக் கண்ணுற்ற நபி (ஸல்) அவர்கள் "அம்மனிதரை விட்டுவிட்டு ஒருவாளித் தண்ணீரைக் கொண்டுவந்து சிறு நீருக்கு மேலால் ஊற்றிவிடுங்கள். மார்க்கத்தை இலகுவாக்குங்கள். அதனைக் கஷ்டப்படுத்த வேண்டாம். மக்களை அரவணையுங்கள். விரட்ட வேண்டாம்" என்று தன் தோழர்களைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் உபதேசித்தார்கள். இந்த ஹதீஸை வாசிக்கச் செய்யுங்கள். ஏனையோரை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- நீரின் வகைகளைப் பற்றிய மாணவர்களின் முன்னறிவைக் கண்டறியுங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.
    - சுத்தம் செய்வதற்கு நீர் அத்தியவசியமாகும். இஸ்லாம் தண்ணீரை வகைப்படுத்தி நோக்குகின்றது. மாஉன் தஹுூர் என்ற வகை நீரே சுத்தம் செய்ய உபயோகிக்கப்படுகிறது. நஜீஸ்களின் தன்மைக்கு ஏற்ப சுத்தம் செய்யும் விதம் வேறுபடுகின்றது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவுக்கு ஆக்கபூர்வமான மேலதிகமான கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - புறச் சுத்தம் செய்யவும், வுழுச்செய்து பரிசுத்தம் பெறவும் தண்ணீர் இன்றியமையாததாகும். நாம் வுழுச் செய்ய உபயோகிக்கும் தண்ணீர் அடிப்படையில் சுத்தமானதாகவும் சுத்தமாக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

- அறிஞர்கள் தண்ணீரை மூன்றாக வகைப்படுத்தி நோக்குவர்.
  - மாஉன் தஹுூர் (பரிசுத்தமானது – பிறவற்றை சுத்தமாக்குவது)
  - மாஉன் தாஹிர் (சுத்தமானது – பிறவற்றை சுத்தமாக்குவதில்லை)
  - மாஉன் முதனஜ்ஜிஸ் - (அசுத்தமான நீர்)
- கடல் நீர், மழைநீர், ஆலங்கட்டி நீர், கிணற்றுநீர், ஆற்றுநீர், முதலானவை மாஉன் தஹுூர் வகையைச் சேர்ந்தவையாகும்.
- தேநீர், இளநீர், நீர்க்கரைசல், குங்குமக்கரைசல், குளிர்பானம் போன்றன மாஉன் தாஹிர் வகையைச் சேர்ந்தவையாகும்.
- சிறுநீர் மற்றும் நஜீஸான பொருட்கள் விழுந்து நிறம், மணம், சுவை என்பன மாற்றமடைந்த நீர் மாஉன் முதனஜ்ஜிஸ் வகையைச் சேர்ந்தவையாகும்.
- குல்லத்தைனுக்கு குறைந்த நீரில் உறுப்புக்களை நேரடியாக விட்டுக் கழுவினால் அந்நீரை வுழூவிற்கு மீண்டும் உபயோகிக்க முடியாது. குல்லதைன் என்பது 210 லீற்றர் நீராகும்.
- நஜிஸ் மூன்று வகைப்படுகிறது. அவை இலகுவான நஜீஸ், சாதாரண நஜீஸ், கடுமையான நஜீஸ் என்பனவாகும்.
- தாய்ப் பாலை உணவாகக் கொள்ளும் இரு வயதுக்குக் குறைந்த ஆண் குழந்தையின் சிறுநீர் இலகுவான நஜீஸ் எனப்படும். இதை நஜீஸ் பட்ட இடத்தில் தண்ணீரைத் தெளிப்பதன் மூலம் சுத்தம் செய்யலாம்.
- மலம், சலம் போன்றன சாதாரணமான நஜிஸுக்கு உதாரணங்களாகும். இவை பட்ட இடத்தை நஜீஸின் நிறம், சுவை, மணம் ஆகிய பண்புகள் நீங்கும்வரை கழுவ வேண்டும்.
- நாய், பன்றி என்பன கடுமையான நஜீஸாகும். இவற்றின் இரத்தம், வியர்வை, உமிழ்நீர், தோய்ந்த இடங்களை ஏழுமுறை தண்ணீராலும் அதில் ஒருமுறை மண்ணினாலும் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 சுத்தம் பற்றி வந்துள்ள ஒரு குர்ஆன் வசனத்தையும் ஒரு ஹதீஸையும் கலந்துரையாடி தேடி எழுதுங்கள்.

குழு-2 நஜீஸினை வகைப்படுத்தி கலந்துரையாடி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுங்கள்

குழு-3 தண்ணீரை வகைப்படுத்தி கலந்துரையாடி ஒவ்வொன்றையும் விளக்குங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்**

நஜீஸ்களை நீக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைப் பெற்றோரிடம் கேட்டு எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள் அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3.1 : தொழுகையின் விதிமுறைகளை அறிந்து தொழுது வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகை இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்று என்பதை அறிந்து கூறுவார்.
- தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புக்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- நாளாந்தம் தொழுகையை விருப்பத்துடன் நிறைவேற்றி வருவார்.
- தொழுகையின் முக்கியத்துவம், சிறப்புக்கள் பற்றி பிறருக்கு எடுத்துக் கூறுவார்; தொழுகையின் பால் அழைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ‘‘அமானிதம் இல்லாதவனிடம் ஈமான் இல்லை. தூய்மை இல்லாதவனிடம் தொழுகை இல்லை. தொழுகை இல்லாதவனிடம் மார்க்கம் இல்லை. மார்க்கத்தில் தொழுகைக்குள்ள அந்தஸ்து, உடலில் தலைக்குரிய அந்தஸ்தைப் போன்றதாகும்.” (அத்தபரானி மு.ஃஜமுஸ் ஸகீர்) தெளிவாக வாசிக்கும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்; ஏனைய மாணவர்களின் செவிசாய்ப்பை உறுதிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தொடராக தொழுகின்றார்களா என்பதை அவர்களிடமே கேட்டறியுங்கள்.
- தொடராக தொழுது வரும் மாணவர்களை பாராட்டி உற்சாகப்படுத்துங்கள். தொழுகையில் பொடுபோக்கான மாணவர்களுக்கு அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - தொழுகை இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக் கடமையாகும். அஸ்ஸலாத் என்பதன் மொழிக் கருத்து ‘பிரார்த்தனை’ என்பதாகும். தொழுகை மி.ஃராஜின்போது கடமையாக்கப்பட்டது. தொழுகையின் முக்கியத்துவம் குறித்து அல்குர்ஆனும் ஹதீஸும் குறிப்பிடுகின்றன. தொழுகை நேரம் குறிக்கப்பட்ட ஒரு வணக்கமாகும். மறுமையில் முதல் விசாரணை தொழுகை பற்றியதாகும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக் கடமையான தொழுகை ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டு கடமையாக்கப்பட்டது.
    - மி.ஃ.ராஜின்போது 50 வேளை தொழுகை பரிசாக வழங்கப்பட்டு பின்னர் ஐவேளையாகக் குறைக்கப்பட்டது.
    - ‘‘இன்னும் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்கு வதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.’’ (51: 56)
    - ‘‘இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகைகளைப் பேணுவார்கள். இத்தகையோர்தாம் (சுவர்க்கத்தை) அனந்தரம் கொள்பவர்கள். இவர்கள் எத்தகையோரென்றால் ஃபிர்தௌஸ் (என்னும் சுவனபதியை) அனந்தரமாக கொள்வார்கள், அவர்கள் அதில் நிரந்தர மாக(த்தங்கி) இருப்பார்கள்.’’ (23: 9-11)
    - ‘‘நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது மு.ஃ.மின்களுக்கு விதியாக்கப்பட்டுள்ளது.’’ (4:103)
    - ‘‘மறுமையில் ஒரு மனிதனின் அமல்களைப் பற்றி விசாரிக்கப்படும் போது தொழுகையைப் பற்றியே முதன் முதலாக விசாரிக்கப்படும். அது சீராக அமைந்து விடுமேயானால் ஏனைய அனைத்து வணக்க வழிபாடுகளும் சீராகவே அமையும். அது சீராகவில்லையென்றால் ஏனைய அனைத்தும் சீரற்றதாகவே இருக்கும்.’’ (அபூ தாவூத்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடி ஆய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 தொழுகையின் முக்கியத்துவம், சிறப்புக் குறித்துப் பேசும் பின்வரும் அல்குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பை தர்ஜமதுல் குர்ஆனில் தேடி எழுதுங்கள்.

குழு-2 தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நான்கு ஹதீஸ்களை தேடி எழுதுங்கள்.

குழு-3 தொழுகை விதியாக்கப்பட்ட சம்பவத்தை தேடி எழுதுங்கள்.

குழு-4 தொழுகை உரிய நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை என்பதை வலியுறுத்தும் அல்குர்ஆன், ஹதீஸ்களை எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

ஆண்களும் பெண்களும் தொழும்போது அணியும் ஆடை மற்றும் தொழுகையின் இருப்புக்கள் என்பவற்றிலுள்ள வேறுபாடுகளை கேட்டறிந்து எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3.2 : தொழுகையின் விதிமுறைகளை அறிந்து தொழுது வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகையின் ஷர்த்துகள், பர்ளுகளை அறிந்து கூறுவார்.
- ஷர்த்து, பர்ளுகளைப் பேணித் தொழுவதன் மூலமே தொழுகை அங்கீகரிக்கப்படும் என்பதை விளக்கிக் கூறுவார்.
- ஷர்த்து, பர்ளுகளைப் பேணித் தொழுது வருவார்.
- தொழுகையின் ஸுன்னத்துகளைப் பேணித் தொழுது வருவார்.
- தொழுகையை முறிக்கும் காரியங்களை விளங்கி உள்ளச்சத்துடன் தொழுது வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ஆபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாயலின் ஓரத்தில் அமர்ந்திருந்தபோது ஒரு மனிதர் பள்ளிவாயலுக்கு வந்து தொழுதார். பிறகு நபி (ஸல்) அவர்களிடம் வந்து ஸலாம் சொன்னபோது நபியவர்கள் பதில் கூறிவிட்டு ''நீர் மீட்டித் தொழுவீராக. ஏனெனில் நீர் தொழவில்லை'' என்று கூறினார்கள். இவ்வாறு இரு முறை கூறிய பின் மூன்றாவது தடவையும் நபியவர்கள் இவ்வாறு சொன்னபோது அம்மனிதர் ''யா ரஸுலல்லாஹ் எனக்கு கற்றுக் கொடுங்கள்'' என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், ''நீங்கள் தொழுகைக்கு தயாரானால் வுழு.ஃவை நல்ல முறையில் செய்யுங்கள். பிறகு கிப்லாவை முன்னோக்கி தக்பீர் கட்டுங்கள். பிறகு அல்குர்ஆனிலிருந்து உங்களுக்கு (தடுமாற்றமின்றி ஓதுவதற்கு) இலகுவான வசனங்களை ஓதுங்கள். பிறகு ருகூஉ செய்யுங்கள். அதில் (அவசரப்படாமல் நிதானமாக) நிம்மதியாக செய்யுங்கள். பிறகு (ருகூவிலிருந்து) எழுந்திருந்து நேராக நில்லுங்கள். பிறகு ஸஜ்தா செய்யுங்கள். அதனை (அவசரப்படாமல்) நிம்மதியாக செய்யுங்கள். பிறகு தலையை உயர்த்தி நேராக உட்காருங்கள். பிறகு ஸஜ்தா செய்யுங்கள். அதினை (அவசரப்படாமல்) நிம்மதியாகச் செய்யுங்கள். பிறகு தலையை உயர்த்தி நேராக நில்லுங்கள். இவ்வாறே தொழுகையில் மற்ற ரக்அத்களிலும் செய்வீராக.'' (புகாரி) என்ற ஹதீஸை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- தொழுகையை நிறைவேற்றும் முறை தொடர்பாக மாணவர்களிடம் வினவி அவர்களின் கருத்தைப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - தொழுகை இஸ்லாத்தின் அடிப்படைக் கடமையாகும். எல்லாவற்றுக்கும் விதிமுறைகள் இருப்பது போல் தொழுகைக்கும் விதிமுறைகள் உள்ளன. தொழுகையின் ஷர்த்துகள் மற்றும் பர்ளுகளைப் பேணி தொழுவதன் மூலமே தொழுகை அங்கீகரிக்கப்படுகிறது.

படி 2 : ● மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

● கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

● மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : ● கலந்துரையாடலின் மூலம் தொகுத்த கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.

● ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.

● குறைநிரப்புப் செய்து வழிகாட்டுங்கள்.

● பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

- தொழுகையின் ஷர்த்துகள் 10 உள்ளன.
- தொழுகையின் பர்ளுகள் 19 உள்ளன.
- ஷர்த்து, பர்ளுகளை அறிந்து அவற்றைப் பேணித் தொழும்போதுதான் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
- அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படும் தொழுகைக்கே நன்மைகள் கிடைக்கும்; பாவங்கள் மன்னிக்கப்டும். தொழுகையின் பிரதான ஸுன்னத்துகள் 07 ஆகும். அவற்றைப் பேணித் தொழுவதன் மூலமே தொழுகை பரிபூரணமடைகிறது. தொழுகையை முறிக்கும் காரியங்களே முப்திலாத் எனப்படுகிறது. அவ்வாறான முப்திலாத்கள் 09 உள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 தொழுகையின் ஷர்த்துகளை தொகுத்து எழுதுங்கள்.

குழு-2 தொழுகையின் பர்ளுகளை ஒழுங்கு முறையில் எழுதுங்கள்.

குழு-3 தொழுகயைின் பிரதான சுன்னத்களை எழுதுங்கள்.

குழு-4 தொழுகயைின் முப்திலாத்களை எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தொழுகையின் நிலைகளை எடுத்துக்காட்டும் படங்களை சேகரித்து ஒவ்வொரு நிலையிலும் காணப்படும் தொழுகையின் பர்ளுகளை அடையாளப்படுத்தி வகைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 : நோன்பு பற்றி அறிந்து நோன்பு நோற்றுவருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நோன்பின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- ரமழானின் சிறப்புக்களை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார்.
- நோன்பின் நோக்கத்தைப் புரிந்து பேணுதலாக நோன்பு நோற்று பாவங்களிலிருந்து தவிர்ந்து வாழ்வார்.
- ரமழானில் செய்யப்படும் நற்செயல்களின் சிறப்புக்களை அறிந்து பிறருக்குக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ''ஆதமின் மகன் செய்யும் அமல்கள் அனைத்தும் அவனுக்காகவே புரியப்படுகின்றன. நோன்பைத் தவிர. அது எனக்கே உரியது. அதற்கு நானே கூலி கொடுக்கிறேன். எனக்காகவே அவன் உண்பதைத் தவிர்க்கிறான். எனக்காகவே பானங்களைப் பருகாதிருக்கின்றான். என்னைப் பயந்தே அவன் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிறான்.''

  இந்த ஹதீஸ் குத்ஸியை தாமாக முன்வந்து வாசிக்கும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட ஹதீஸின் கருத்தை வினவி மாணவர்களின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - ஒவ்வொரு முஸ்லிமும் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது கடமை (பர்ள்) ஆகும். இது ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டு கடமையாக்கப்பட்டது. நோன்பை அறபியில் 'அஸ்ஸவ்ம்' என்போம்
  - நோன்பு மாதத்தில் அனைத்து நற்செயல்களுக்கும் ஏனைய காலங்களை விட பல மடங்கு நன்மைகளை வழங்குவதாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான். ரமழான் மாதத்தின் 30 அல்லது 29 நாட்களும் முப்பெரும் பத்துக்களாக பிரிக்கப்பட்டிருப்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.
  - ரமழானில் தராவீஹ், கியாமுல் லைல் போன்றவற்றை நிறைவேற்றுவதனால் அதிக நன்மைகள் கிடைக்கின்றன. தொழுகையில் பர்ளான, ஸுன்னத்தான தொழுகைகள் இருப்பது போல் நோன்பிலும் பர்ளான, ஸுன்னத்தான நோன்புகள் உள்ளன.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3 :**

- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஏனைய குழுக்களுக்கும் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- குறைநிரப்புச் செய்து வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - ஸஹர் வேளை முதல் சூரியன் மறையும் (ம.்.ரிப் அதான்) வரை அல்லாஹ்வுக்காக உண்ணாமலும் பருகாமலும் நோன்பை முறிக்கும் ஏனைய காரியங்களில் ஈடுபடாமலும் இருப்பதே நோன்பாகும்.
    - ‘‘விசுவாசிகளே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போல் நீங்கள் பயபக்தியுடையோராய் மாறலாம் என்பதற்காக உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது.’’ (2: 183)
    - ‘‘ஒருவர் இறை நம்பிக்கையுடனும் மறுமையின் நற்கூலியைப் பெறுகின்ற எண்ணத்துடனும் ரமழான் மாதத்தின் நோன்புகளை நோற்பாராயின் அவர் முன்னர் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான்’’ (புகாரி, முஸ்லிம்)
    - ரமழான் மாதத்தின் முதல் பத்து நாட்களும் அல்லாஹ்வின் அருளையும் (ரஹ்மத்) இரண்டாவது பத்து நாட்களில் பாவமன்னிப்பையும் (ம.்.பிரத்), இறுதிப் பத்து நாட்களில் நரக விடுதலையையும் (இத்கும் மினந் நார்) வேண்டிப் பிரார்த்திக்குமாறு ஹதீஸ்கள் போதிக்கின்றன.
    - ‘‘சுவர்க்கத்தில் அர்ரய்யான் எனப்படும் ஒரு வாயில் உண்டு. நோன்பாளிகள் மாத்திரமே மறுமையில் அதனூடாக நுழைவர். அவர்களைத் தவிர வேறு எவரும் அதனூடாக நுழைய மாட்டார்கள்.’’ (புகாரி, முஸ்லிம்)
    - ரமழானில் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த ஓர் இரவு இருக்கிறது. அவ்விரவு ‘லைலதுல் கத்ர்’ என அழைக்கப்படுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 நோன்பின் சிறப்புக்களைப் பட்டியல்படுத்துங்கள்.

குழு-2 நோன்பாளிக்கு கிடைக்கும் நன்மைகளைக் கலந்தரையாடி எழுதுங்கள்.

குழு-3 உங்களது முஸ்லிமல்லாத நண்பர் ஒருவருக்கு நோன்பை அறிமுகப்படுத்திக் கடிதம் ஒன்றை எழுதுங்கள்.

குழு-4 கடந்த ரமழானில் நீங்கள் விஷேடமாகச் செய்த நற்செயல்களைப் பற்றிக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**பின்தொடர் செயற்பாடு - வீட்டில்**

றமழான் மாதம் நோன்பு நோற்று இதர அமல்களில் ஈடுபட்டமை தொடர்பான பதிவொன்றை அல்லது முஹாஸபா அட்டை ஒன்றைப் பேண ஆலோசனை வழங்குங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | **இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழிகாட்டுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 3.1 | : | **பெற்றோரை கண்ணியப்படுத்துவார்.** |
| **பாடவேளை** | | : | **2** |

**கற்றல் பேறுகள்:**

- பெற்றோரை கண்ணியப்படுத்துவன் அவசியம் குறித்து விளக்குவார்.
- பெற்றோரது கண்ணியத்திற்கு பாதிப்பு ஏற்படும் அம்சங்களை அறிந்து அவற்றிலிருந்து தவிர்ந்து நடப்பார்.
- பெற்றோருக்காக எப்போதும் உபகாரம் செய்து நடந்து கொள்வார்.
- பெற்றோருக்காக எப்போதும் பிரார்த்தனை செய்து வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ

  என்ற துஆவை வாசிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் பெற்றோருக்காக எவ்வாறு பிரார்த்திக்கின்றனர் என்பது பற்றி கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாம் பெற்றோருக்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்கியுள்ளது. அல்லாஹ்வை ஈமான் கொள்வதற்கும் அவனை வணங்குவதற்கும் அடுத்ததாக பெற்றோருக்கு உபகாரம் செய்வதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.
  - பெற்றோர் மரணமடைந்த பின்னரும் அவர்களுக்கு உபகாரம் செய்யும்படி இஸ்லாம் பணித்துள்ளது.
  - பெற்றோரை நோவினை செய்வது மாபெரும் பாவமாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- தாம் கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:

  - பெற்றோருடன் கண்ணியமாக நடந்து கொள்வதன் மூலம் ஈருலகிலும் சிறந்த பாக்கியங்களை பெற்றுக்கொள்ள முடியும். தாய் தந்தையருக்குரிய கடமைகளை அல்லாஹ், அவனுக்குரிய கடமைகளுடன் இணைத்துக் கூறியிருக்கின்றான்.

  - எமக்காக பெற்றோர் பட்ட கஷ்டங்களை எண்ணி அவர்கள் எம்மோடு பாசமுடன் நடந்து, எமக்குச் செய்த நன்மைகளுக்காக நன்றியுடன் நடக்க வேண்டும்.

    ‘‘எனக்கு நன்றி செலுத்து மேலும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்து’’ (லுக்மான்: 14)

    பெற்றோரை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். “பெற்றோரின் திருப்தியிலேயே அல்லாஹ்வின் திருப்தி காணப்படுகின்றது. பெற்றோரின் அதிருப்தியிலேயே அல்லாஹ்வின் அதிருப்தி காணப்படுகிறது.’’ (திர்மிதி)

    ‘‘நபியே! உமதிறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்று கட்டளையிட்டிருப்பதுடன் தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிடுகிறான். அவர்களில் ஒருவரோ அன்றி இருவருமோ முதுமையடைந்து விட்டபோதிலும் உம்மிடமிருந்து அவர்களை விரட்டவும் வேண்டாம். அவர்களை நிந்தனையாகச் ‘சீ’ என்று சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் எதைக் கூறிய போதிலும் புயம் தாழ்த்தி மிக்க மரியாதையாகவும் அன்பாகவுமே பேசும்.’’ (பனீ இஸ்ராயீல்: 23)

  - பெற்றோருக்காக தொடர்ந்தும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

    وَقُلْ رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا

    ~~vd; ,iwtNd! rpW tajpy; vt;tihW vdj;d ,tHfs; fUiz AlD k;ghrj;Jl D k;ts Hj;j hHfNs hmt;thW ,tHfs; kPJ ePfUiz Gupthahf!|| (gdP,]uhaPy; 24)

    رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ

    ~~vq;fs; ,iwtNd vdf;Fk; vd; ngw;NwhUf;Fk; ekgpf;if nfhz;Nlhh;mid;tUf;Fk;Nfs;tpf;z f;Ff;Nfl;f;ggLk;ehspy; kd;dpg;g mUs;thahf!|| (,gwh`PK; 41)

  - பெற்றோர் முன்னிலையில் உரத்துக் கதைத்தல், அவர்கள் நின்று கொண்டிருக்க நாம் அவர்களுடன் உட்காருதல், கூட நடக்கும்போது அவர்களுக்கு முன்னால் நடத்தல், அவர்களை பெயர் கூறி அழைத்தல், அவர்களுக்கு உணவு பரிமாறுமுன் தனக்கோ தனது பிள்ளைகளுக்கோ பரிமாறுதல், அவர்களின் அறைக்குள் அனுமதி இன்றி நுழைதல் என்பன மரியாதைக் குறைவான செயல்களாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

## குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

குழு-1 பின்வரும் குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பை வாசித்து நன்கு கலந்துரையாடி அவற்றிலிருந்து எமது வாழ்வில் பின்பற்றத்தக்க படிப்பினைகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.

(அந்நிஸா: 36) (லுக்மான்: 14) (பனீ இஸ்ராயீல்: 23)

குழு-2 பெற்றோருக்கு பணிவிடை செய்வது தொடர்பாக வந்துள்ள நான்கு ஹதீஸ்களை தொகுத்து அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை எழுதுங்கள்.

குழு-3 நாம் எமது பெற்றோரை எவ்வாறு கண்ணியப்படுத்தி அவர்களுக்கு உபகாரம் செய்வதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடிப் பட்டியல்படுத்துங்கள்.

குழு-4 பெற்றோரை ஏன் நாம் கண்ணியப்படுத்த வேண்டும் என்பதையும் அவர்கள் எமக்காக படும் சிரமங்களையும் தனித்தனியாக பட்டியற்படுத்துங்கள்.

## வீட்டில் பின்தொடர் செயற்பாடு

பெற்றோருக்கு செய்யும் பணி விடைகளை மேலும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகளை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழிகாட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : ஆசிரியர்களின் அந்தஸ்தை அறிந்து அவர்களைக் கனம் பண்ணுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஆசிரியர்களது அந்தஸ்து, கண்ணியம் என்பன பற்றி அறிந்து விளக்குவார்.
- எப்போதும் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவதோடு அவர்களுக்காகப் பிரார்த்தித்தும் வருவார்.
- ஆசிரியர்களுடன் பண்பாக நடந்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ''எம்மில் முதியோருக்கு மரியாதை செய்யாதவர்களும், சிறியோருக்கு அன்பு காட்டாதவர்களும் ஆசிரியர்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றாதவர்களும் எம்மைச் சேர்ந்தவர்களல்லர்.'' (அஹ்மத்) என்ற ஹதீஸை தாமாக முன்வரும் ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ஆசிரியர்களின் அந்தஸ்து பற்றி மாணவர் விளங்கி வைத்துள்ளவற்றை கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - ஆசிரியர்கள் அந்தஸ்துடையவர்கள்
    - அறிவுக்கும் அறிவைப் போதிப்பதற்கும் இஸ்லாம் மிகுந்த கண்ணியம் வழங்கியுள்ளது.
    - இமாம்களுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் நாம் பிரார்த்திக்க வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3:

- நாம் கலந்துரையாடிப்பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - ஆசிரியர்கள் கண்ணியத்துக்குரியவர்கள். மரியாதை செலுத்தப்படத் தகுதியானவர்கள்.
  - உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும் கல்விஞானமுள்ளவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துகிறான்.
  - அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் வானம் பூமியிலுள்ள எல்லாப் படைப்புக்களும் புற்றிலிருக்கும் எறும்பு, கடலிலுள்ள மீன் உட்பட அனைத்தும் ஆசிரியர்களுக்காக பிரார்த்திக்கின்றன. (திர்மிதி)
  - ஆசிரியர்களை கண்ணியப்படுத்த வேண்டும்; அவர்களுக்காக பிரார்த்திக்கவும் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஆசிரியர்களின் அந்தஸ்தை குறிப்பிடும் அல்குர்ஆன் வசனங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

குழு-2 கற்றவர்களினதும் ஆசிரியர்களினதும் கண்ணியத்தை கூறும் ஹதீஸ்களை எழுதுங்கள்.

குழு-3 ஆசிரியர்களின் கண்ணியத்தைப் பேண மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பட்டியலிடுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

ஆசிரியர்களுடன் நெருக்கமான உறவைப் பேணவும் ஆசிரியர்களுக்காக தினமும் துஆச் செய்யவும் வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப்பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவர்க்கும் வழிகாட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : நாவைப் பேணி நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நாவைப் பேணுவதால் கிடைக்கும் நன்மைகளை அறிந்து கூறுவார்.
- பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளை இனங்கண்டு கூறுவார்.
- மக்கள் மனதைக் கவரும் அழகிய வார்த்தைகளால் ஈருலகிலும் நன்மை பெறலாம் என்பதை ஏற்று நடைமுறைப்படுத்துவார்.
- தொடர்பாடலின்போது மனங்கவரும் வண்ணம் அன்பான வார்த்தைகளைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- பேச்சு எமக்கு வழங்கப்பட்ட அருள் என்றும் அது ஒரு அமானிதம் என்றும் மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். ஒருவருடைய பேச்சின் மூலம் எதைப் புரிந்து கொள்கிறீர்கள் என்று மாணவர்களிடம் வினவுங்கள்.
- எமது தொடர்பாடல் இஸ்லாமியப் பண்பாடுடையதாகவும் நாகரிகமானதாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - பேச்சு என்பது தொடர்பாடலுக்கும் மக்களைக் கவர்வதற்குமான ஊடகமாகும். பேச்சின் மூலம் நன்மைகளை அடைந்து கொள்வதற்கான வழிகாட்டலை இஸ்லாம் வழங்குகின்றது.
  - மக்கள் செய்யும் உதவிக்கு நன்றி கூறுவதும் மக்களை வாழ்த்துவதும் இஸ்லாம் போற்றும் பண்புகளாகும். தீயதைப் பேசாது நாவைப் பேணுவதால் சுவர்க்கம் கிடைக்கும் என நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவிற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்:
  - பேச்சு என்பது அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய பெரும் அருளாகும்

- “அவனே மனிதனுக்கு பேசக் கற்றுக் கொடுத்தான்.” (55: 4)
- தவறான முறையில் பேசுவது அல்லாஹ் தந்த அருளை துஷ்பிரயோகம் செய்வது போன்றதாகும். இஸ்லாம் பேச்சை ஈமானுடன் தொடர்புபடுத்தியே நோக்குகின்றது. பேசும்போது தவறான வார்த்தைப் பிரயோகங்களும் பிரச்சினைகளும் வரும் எனக் கருதினால் மௌனமாக இருக்கும்படியே இஸ்லாம் கூறுகின்றது.
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கின்றாரோ அவர் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்.” (அல்புகாரி)
- பேசும்போது கவனிக்க வேண்டிய நிபந்தனைகள்:

- தேவைக்காக பேசுதல்
- சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப பேசுதல்
- பொருத்தமான வார்த்தைகளை உபயோகித்துப் பேசுதல்
- ஆளறிந்து பேசுதல் (ஆசிரியர்களுடன், பெற்றோர்களுடன், பெரியார்களுடன்)

- பேச்சிலே தவிர்க்க வேண்டியனவும் உள்ளன.

  உதாரணம்: -புறம், பொய், துர்வார்த்தைகள், பட்டப்பெயர் கூறுதல்
- உரத்து சப்தமிட்டு பேசுவதால் மக்கள் வெறுப்படைகிறார்கள் “உமது சப்தத்தை தாழ்த்திக் கொள்வீராக. சப்தங்களில் வெறுப்பானது கழுதையின் சப்தமாகும்.” (31: 19)
- நா ஒரு எலும்பில்லாத உறுப்பு. எனவே அதனால் நிறைய விபரீதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன. நாவடக்கம் பற்றி அதிகமான ஹதீஸ்கள் வந்துள்ளன.
- நாவினால் நன்மை பெறக்கூடிய வழிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

  உதாரணம்: வாழ்த்துக் கூறுதல், நன்றி கூறுதல், உபதேசம் செய்தல், முகமன் கூறுதல், அல்குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 நாவைப் பேணுவது பற்றி வந்துள்ள மூன்று ஹதீஸ்களை தேடி எழுதுங்கள்.

குழு-2 பேச்சின்போது கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள் ஐந்தினை தேடி எழுதுங்கள்.

குழு-3 பேச்சில் தவிர்க்க வேண்டிய அம்சங்கள் ஐந்தினை தேடி எழுதுங்கள்.

குழு-4 பண்பான வார்த்தைகளை உள்ளடக்கிய சிறிய உரையாடல் ஒன்றை நிகழ்த்திக் காட்டுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

ஒழுக்கமாகப் பேசவும் பிறரின் பேச்சுக்களை மதித்துக் கேட்கவும் நெறிப்படுத்துங்கள்.

சிறந்த பொருத்தமான வார்த்தைகளை மாத்திரம் பயன்படுத்துவதற்கு பயிற்றுவியுங்கள்.

தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழிகாட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.4 : வீடுகளிலும் சபைகளிலும் அனுமதி பெற்று நுழைவார்.

பாடவேளை : 2

**கற்றல் பேறுகள்:**

- வீடுகளிலும் சபைகளிலும் நுழையுமுன் அனுமதி பெறுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- வீடுகளிலும் சபைகளிலும் பேண வேண்டிய ஒழுங்குகளை பட்டியற்படுத்துவார்.
- வீடுகளிலும் சபைகளிலும் இஸ்லாமிய விழுமியங்களைப் பேணி நடப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- அல்குர்ஆனின் 24 : 27, 28 வசனத்தை அழகுற ஓதும் ஒரு மாணவனைக் கொண்டு ஓதச் செய்யுங்கள். மற்றொரு மாணவனைக் கொண்டு அதன் மொழிபெயர்ப்பை வாசிக்கச் செய்யுங்கள்.
- ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அனுமதி பெறுதல் தொடர்பாக மாணவர்கள் அறிந்துவைத்துள்ளவற்றை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கருத்துப் பரிமாறுங்கள்.
    - வீடுகளிலும் அவைகளிலும் நுழையும்போது பேண வேண்டிய ஒழுங்குகளை இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது. வீடுகளிலும் அவைகளிலும் நுழையுமுன் அனுமதி பெறுமாறு ஷரீஅத் பணித்துள்ளது. அவைகளில் பேணி நடக்க வேண்டிய ஆதாபுகளை இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- தமது அறிக்கையை சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவிற்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கு கருத்துக்கள் வழங்க சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - எவரது வீடாயினும் அனுமதி பெற்ற பின்பே நுழைய வேண்டும். மூன்று சந்தர்ப்பங்களில் தனது பெற்றோர், சகோதர, சகோதரிகளது அறையினுள் நுழைவதாயினும் அனுமதி பெற வேண்டும்.

- அனுமதி மறுக்கப்பட்டாலோ யாதேனுமொரு காரணத்தினால் மூன்று முறை அனுமதி கேட்டும் பதில் கிடைக்காவிட்டாலோ திரும்பிச் செல்ல வேண்டும்.
- வீடுகளிலும் சபைகளிலும் அனுமதி பெற்று ஸலாம் கூறியே நுழைய வேண்டும். சபைகளில் அமர வேண்டியேற்பட்டால் ஏற்கனவே அமர்ந்திருப்போருக்கு இடையூறு இல்லாத விதமாக நடந்து கொள்ள வேண்டும்.
- எவரையேனும் எழுப்பிவிட்டு அந்த இடத்தில் உட்காருவதை தவிர்க்க வேண்டும். வயதானவர், அறிஞர், கண்ணியத்திற்குரியோர் வந்தால் அன்புடன் இடம்கொடுத்து அமரச் செய்ய வேண்டும்.
- சபைகளில் கதைக்க நேரிட்டால் தலைவரிடம் அனுமதி பெற்றே கதைக்க வேண்டும். சபைகளில் பேசப்படும் இரகசியங்களை வெளியிடுவதும் இருவர் மாத்திரம் இரகசியம் பேசுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.
- சபைகளுக்குச் செல்லும்போது குளித்துவிட்டு, மணம் பூசி தூய ஆடைகளுடன் செல்வது விரும்பத்தக்கதாகும். சபைகளில் தாம் அறிந்தோருக்கு மாத்திரம் ஸலாம் சொல்வதும் கைலாகு செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 பின்வரும் இலக்கங்களுடைய அல்குர்ஆன் வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனில் தேடி எழுதிக் கொள்ளுங்கள். பின்னர் அந்த வசனங்கள் தரும் முக்கிய போதனைகளைப் பட்டியற்படுத்துங்கள்: (6: 54), (24: 61), (24: 27), (24: 59)

குழு-2 ரியாழுஸ் ஸாலிஹீன் என்ற ஹதீஸ் நூலில் ஹதீஸ் இலக்கம் 870, 872, 879 ஆகிய இலக்கங்கள் கொண்ட ஹதீஸ்களின் மொழிபெயர்ப்பைத் தேடி எழுதுங்கள்.

குழு-3 ஒரு வீட்டுக்கு விருந்தினராகச் சென்றது முதல் அங்கிருந்து திரும்பிவரும் வரை பேண வேண்டிய ஒழுங்குகளை உங்களது அனுபவத்தை அடியாகக் கொண்டு கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-4 சபைகளுக்குச் சென்றால் அங்கிருப்போரால் மதிக்கத்தக்க ஒருவராக இருக்க வேண்டுமெனில் எவ்வாறு நடந்து கொள்வது வரவேற்கத்தக்கது என்பது பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

வீட்டினுள் நுழையும்போது அல்லது சபைகளில் நுழையும்போது பிழையான வழிமுறைகளைக் கடைப்பிடித்த ஒருவரின் நடவடிக்கைகளையும் அதன்போது கடைப்பிடித்திருக்க வேண்டிய வழிமுறைகளையும் எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப்பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவர்க்கும் வழிகாட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.5 : பிறர் தேவையை முதன்மைப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பிறருக்கு உதவக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து கூறுவார்.
- பிறருடைய தேவையை முற்படுத்துவதன் அவசியத்தை ஏற்று நடப்பார்.
- பிறருக்கு உதவுவது உயர்ந்த தர்மம் என்பதை விளக்குவார்.
- பிறருக்கு உதவுவதனால் கிட்டும் பயன்களை அறிந்து உதவி செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- யர்மூக் என்ற இடத்தில் ஒரு போர் நடந்தது. அதில் முஸ்லிம்கள் உரோம நாட்டுப் படையை எதிர்த்துப் போராடினார்கள். அதில் இரு தரப்பிலும் பலர் காயப்பட்டனர். சிலர் இறந்தனர்.

  அபூஜஹ்மு இப்னு ஹுதைபா, சிறிதளவு தண்ணீருடன் போர்க்களத்தில் காயப்பட்டிருந்தவர் மத்தியில் நுழைகிறார். அவரது சிறிய தந்தையின் புதல்வர் இக்ரிமாவைத் தேடுகிறார். அவர் அதிகமான காயங்களுடன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். தண்ணீரைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்து விரைவாக எடுத்து வருமாறு சைகை செய்தார். அபூஜஹ்மு தண்ணீருடன் விரைந்து அவரது வாயருகில் நீர் புகட்ட முனைகிறார். பக்கத்தில் மற்றொருவர் தண்ணீர் என முணங்குகிறார். இக்ரிமாவோ தனக்கு வேண்டாம் முணங்குகின்ற தன் சகோதரனுக்கு வழங்குங்கள் என்று சைகை காட்டுகிறார். அவர் ஹிஷாம் இப்னு அபுல் ஆஸ் ஆவார். அபூ ஜஹ்மு உடனே தண்ணீருடன் அங்கு சென்று நீர் பருக்க முனைகிறார். மற்றொரு முணங்கல் சப்தம் கேட்கிறது. தண்ணீர் தண்ணீர். உடனே ஹிஷாம் இப்னு அபுல் ஆஸ் தனக்கு வேண்டாம். அடுத்தவருக்கு நீர் கொடுங்கள் என சைகை செய்கிறார். அபூஜஹ்மு அவ்வாறே செய்தார். அம்மூன்றாம் மனிதரை நெருங்கும்போது அவர் இறந்து விட்டார். உடனே இரண்டாமவரான ஹிஷாமை நோக்கி விரைந்து வருகிறார். அதற்குள் அவரும் இறந்து விடுகிறார். பின்னர் தனது உறவினரான இக்ரிமாவிடம் செல்கிறார். அதற்குள் அவரும் இறந்து விட்டார். இவ்வரலாற்றுச் சம்பவத்தை கதையாக எடுத்துக் கூறி மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.

- வகுப்பில் நண்பர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கிய சந்தர்ப்பங்கள் பற்றி வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - பிறர் நலனைக் கவனிப்பது அவசியமாகும். பிறர் நலனை முற்படுத்துவது அல்ஈஸார் எனப்படும்.
  - எமது தேவைகளை விட பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவது உயர்ந்த தர்மமாகும். ஸஹாபாக்கள் பிறர் தேவைகளை முற்படுத்தி நடந்து எமக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றனர்.

படி 2 : ● மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

● மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : ● ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

● மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

● ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.

● பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:

  - ஈகை, தாராளத்தன்மை போன்றவை இஸ்லாம் போதிக்கும் சிறந்த பண்புகளாகும். ஒரு முஸ்லிம் தனது நலனை மட்டும் கவனிக்காது பிறரது நலன்களையும் கவனிக்க வேண்டும்.
  - “உங்களில் ஒருவர் தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாதவரை ஈமான் கொண்டவராகமாட்டார்.” (புகாரி)
  - நல்லவற்றை நேசிப்பதும் நல்லவற்றிற்காக துணை நிற்பதும் ஒரு முஸ்லிமின் பண்பாகும்.
  - “நல்லவற்றை செய்யுங்கள். இதன்மூலம் நீங்கள் வெற்றியடைவீர்கள்.” (22: 77)
  - “ஒரு மு.ஃ.மினது கஷ்டங்களை நீக்கி அல்லது அவனது பசியைப் போக்கி நீங்கள் அவனுக்கு ஏற்படுத்தக் கூடிய மகிழ்ச்சி அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயலாகும்.” (இப்னு அபித்துன்யா)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

● பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

● கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 பிறர் தேவையை முற்படுத்த வேண்டும் என்ற பண்பை போதிக்கும் இஸ்லாத்தின் தனித்துவ தன்மையை விளக்குங்கள்.

குழு-2 பிறர் தேவையை முற்படுத்தி வாழ்ந்த நபி (ஸல்) அவர்களின் வீட்டில் நிகழ்ந்த சம்பமொன்றை கதையாக எழுதுங்கள்.

குழு-3 வகுப்பறைச் சூழலில் பிறர் தேவைகளை முற்படுத்தி நடந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை பட்டியல்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

குடும்ப அங்கத்தவர்களிடையே பிறர் தேவையை முற்படுத்தும் பண்பை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை திட்டமிட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி 4.1 : அல்குர்ஆனை முறையாகக் கையாளுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆன் புனிதமான வேதநூல் என்பதை விளக்குவார்.
- அல்குர்ஆனை கையாளும் போது சுத்தத்தைப் பேணிக் கொள்வார்.
- அல்குர்ஆன் ஓதப்படும் முறைகளை அறிந்து ஓதி வருவார்.
- அல்குர்ஆனை மனனமிடுவதன் சிறப்பை அறிந்து மனனமிட்டு ஓதுவார்.
- அல்குர்ஆனை அதன் புனிதம் பேணிக் கையாளுவது இபாதத் என்பதை அறிந்து செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- அல்குர்ஆனின் சிறப்பு பற்றிய ஹதீஸ்களில் ஒன்றை மாணவர் ஒருவரைக் கொண்டு வாசிக்கச் செய்து செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அல்குர்ஆனின் சிறப்பு பற்றி மாணவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - அல்லாஹ்வின் பேச்சாகிய அல்குர்ஆன் புனிதமானது.
    - அதனை சுத்தத்துடனேயே கையாளுதல் வேண்டும்.
    - குர்ஆனை ஓதும்போதும் செவிமடுக்கும்போதும் அதற்குரிய ஒழுங்கைப் பேணுதல் வேண்டும்.
    - அல்குர்ஆனை ஒழுங்காகக் கையாளுவது இபாதத்தாகும்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
  - அல்குர்ஆனை அசிங்கப்படுத்தலும் அகௌரவப்படுத்தலும் பெரும் பாவங்களாகும்.
  - அல்குர்ஆனை சுமந்து செல்லும்போதும் வைக்கும் போதும் கையாளும் போதும் அதன் புனிதத்தைப் பேண வேண்டும்.
  - ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹியாக உள்ள அல்-குர்ஆன் புனிதமானது என்பதை குர்ஆனும், ஸுன்னாவும் கூறுகின்றன.
  - அல்குர்ஆனை வுழுவுடன் கையாளுதலே ஸுன்னத்தான வழிமுறையாகும்.
  - உடல், உடை, இடச் சுத்தத்தைப் பேணி குர்ஆனைக் கையாளுதல் வேண்டும்.
  - அல்குர்அனை தஜ்வீத் முறைகளைப் பின்பற்றி ஓதுவது சிறப்பானதாகும்.
  - அல்குர்ஆனை ஓதும்போது அதன் தூய்மை, புனிதம், தெய்வீகத் தன்மை, மாட்சிமை என்பவற்றைக் கருத்திற்கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.
  - அல்குர்ஆனை தினமும் ஓதுதல், ஓதக் கேட்டல், மனனம் செய்தல் என்பன இபாதத்களாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 அல்குர்ஆனை ஓதுபவர் பேண வேண்டிய உடல் சுத்தத்தை கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-2 அல்குர்ஆனை ஓதுவதன் சிறப்பை எடுத்துக் காட்டும் இரண்டு குர்ஆன் வசனங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-3 அல்குர்ஆனை மனனமிடுவதன் சிறப்பை எடுத்துக் காட்டும் இரண்டு ஹதீஸ்களைத் தேடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

வீட்டில் அல்குர்ஆன் கையாளப்படும் முறையினை அவதானிக்கவும், பொருத்தமான முறையில் அதனை கையாளவும் முயற்சிக்கும்படி அறிவுறுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2.1 : அல்குர்ஆனின் ஸூராக்களை திருத்தமாக ஓதிக் காட்டுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸூரதுல் இக்லாஸின் பதவிளக்கத்தைக் கூறுவார்.
- ஸூரதுல் இக்லாஸின் சிறப்பினை அறிந்து கூறுவார்.
- ஏகத்துவக் கொள்கைக்குரிய போதனைகளை இதிலிருந்து அறிந்து கூறுவார்.
- ஸூரத்துல் இக்லாஸின் போதனைகளை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.
- ஸூரா இக்லாஸை விளங்கி ஓதி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- ஸூரதுல் இக்லாஸை அழகாக ஓதும் ஒரு மாணவனைக் கொண்டு அல்லது ஒலி நாடா மூலம் ஓத வைத்துச் செவிமடுக்க வையுங்கள்.
- இந்த ஸூரா எதை வலியுறுத்துகின்றது என வினவிக் கருத்துப் பரிமாறுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - ஸூரதுல் இக்லாஸ் அல்குர்ஆனின் மிகச் சிறிய ஸூராக்களில் ஒன்றாகும்.
    - இது நபி (ஸல்) அவர்களது மக்கா வாழ்வில் அருளப்பட்டது.
    - இந்த ஸூரா தனிச் சிறப்புக்கள் கொண்டது.
    - இது ஏகத்துவப் போதனைகளை முன்வைக்கின்றது.
    - அதனை ஓதுவது, மனனமிடுவது, அதன் பொருள் அறிந்து கொள்வது என்பன சிறந்த செயல்களாகும்.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், நிறப் பேனாக்கள் கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - மக்காவில் வைத்து அருளப்பட்ட ஸூரதுல் இக்லாஸ் ஏகத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது.
    - இந்த ஸூராவின் சிறப்பை அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பாகத்துக்குச் சமமானது என ஹதீஸ் எடுத்துக் காட்டுகிறது.
    - ஸூரா முன்வைக்கும் முக்கிய கருத்துக்கள்.
        – அல்லாஹ் ஏகன்
        – அல்லாஹ் தேவையற்றவன்
        – அல்லாஹ் சந்ததியற்றவன்
        – அல்லாஹ்வுக்கு நிகரில்லை
    - குர்ஆனின் முக்கிய போதனையாகவுள்ள ஏகத்துவத்தின் சாராம்சத்தை இவ்வத்தியாயம் கூறுகின்றது.
    - இந்த ஸூராவை தஜ்வீத் முறைப்படி மனனமிட்டு உரிய சந்தர்ப்பங்களில் ஓதிக் கொள்ள வேண்டும்.
    - இந்த ஸூராவை காலையிலும் மாலையிலும் ஓதி வருவது நபி வழியாகவுள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஸூரதுல் இக்லாஸின் சிறப்பு பற்றிய ஒரு ஹதீஸை ஹதீஸ் நூல்களில் தேடியெடுத்து மூலத்துடன் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-2** ஸூரதுல் இக்லாஸ் அல்லாஹ் பற்றி கூறுகின்ற விடயங்கள் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுங்கள்.

**குழு-3** ஸூரதுல் இக்லாஸை அரபியிலும் அதன் பொருளை தமிழிலும் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-4** ஸூரதுல் இக்லாஸ் எவ்வாறு ஏகத்துவப் போதனைகளை முன்வைக்கின்றது என்பதைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

பெற்றோருடன் சேர்ந்து ஸூரதுல் இக்லாஸை பொருளுடன் மனனமிடவும் அதனை வகுப்பறையில் முன்வைக்கவும் வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 :** **இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2.2 :** **அல்குர்ஆனின் ஸூராக்களை திருத்தமாக ஓதிக் காட்டுவார்.**

**பாடவேளை :** 3

**கற்றல் பேறுகள்:**

- ஸூரதுல் பலக், நாஸ் ஆகிய ஸூராக்களின் சிறப்பினை அறிந்து கூறுவார்.
- ஸூரதுல் பலக், நாஸ் என்பவற்றின் பதவிளக்கத்தை எடுத்துக் கூறுவார்.
- அல்லாஹ்வின் பாதுகாப்பை எதிர்பார்த்து இவ்விரு ஸூராக்களையும் ஓதிவருவார்.
- இவ்விரு ஸூராக்களிலும் அடங்கும் விடயங்களை தானும் அறிந்து பிறருக்கும் எடுத்துக் கூறுவார்.
- இந்த ஸூராக்களை செவிமடுக்கும்போது அவற்றின் பொருள்களைப் புரிந்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ஸூரதுல் பலக், ஸூரா அந்நாஸ் ஆகிய இரண்டு ஸூராக்களையும் அழகாக ஓதும் ஒரு மாணவனைக் கொண்டு அல்லது ஒலி நாடா மூலம் ஓதவைத்து செவிமடுக்கச் செய்யுங்கள்.
- இந்த ஸூராக்கள் இரண்டும் எதனைக் குறிப்பிடுகின்றன என்பதை மாணவர்களிடம் வினவிக் கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஸூரதுல் பலக், ஸூரதுந் நாஸ் ஆகிய இரு ஸூராக்களும் அல்குர்ஆனில் இறுதியாக உள்ளன.
  - இவை ஸூரா ''முஅவ்விததைன்'' என அழைக்கப்படுகின்றன.
  - அவற்றை ஓதுவதற்கான பல சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.
  - அல்லாஹ் எல்லா சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்புத் தருகின்றவன் என்பதை இவ்விரு ஸூராக்களும் எடுத்துக் கூறுகின்றன.
  - அவற்றை ஓதுவதும் மனனமிடுவதும் அவற்றின் பொருளை அறிந்து கொள்வதும் சிறந்த செயல்களாகும்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், கடதாசிகள், நிறப் பேனாக்கள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 : 
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு, முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - குர்ஆனின் இறுதி இரண்டு ஸூராக்களான பலக், நாஸ் அருளப்பட்டமைக்கு பின்னணிக் காரணங்களும் உள்ளன.
    - தீங்குகளிலிருந்து பாதுகாப்புத் தேடும் ஸூராக்களாக இவை c s ş j hy ; ] _uh “முஅவ்விததைன்” என அழைக்கப்படுகின்றன.
    - எல்லா சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்புத் தேடத் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரம் தான் என்பதை இவ்விரு ஸூராக்களும் உணர்த்தி நிற்கின்றன.
    - அல்லாஹ் மனிதர்களின் இரட்சகன், மனிதர்களின் அரசன், மனிதர்களின் இறைவன் எனும் அடிப்படைக் கருத்துக்களை இந்த ஸூராக்கள் கூறுகின்றன.
    - காலையிலும் மாலையிலும் இந்த ஸூராக்களை ஓதி வருவது நபி வழியாகும்.
    - இந்த ஸூராக்களை தஜ்வீத் முறை பேணி ஓதுவதும், மனனமிட்டுக் கொள்வதும் சிறந்த செயல்களாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு -1 நன்கு கலந்துரையாடி சமூகத்தில் ஸூரதுல் பலக் ஓதப்படும் சந்தர்ப்பங்களை பட்டியல்படுத்துங்கள்.

குழு -2 ஸூரதுல் பலக் தரும் கருத்துக்களை கலந்துரையாடி எழுதுங்கள்

குழு -3 நன்கு கலந்துரையாடி சமூகத்தில் ஸூரதுந் நாஸ் ஓதப்படும் சந்தர்ப்பங்களை பட்டியல்படுத்துங்கள்.

குழு -4 ஸூரதுந் நாஸின் பொருளை கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு:**

ஸூரதுல் பலக், ஸூரதுந் நாஸ் ஆகிய இரண்டு ஸூராக்களையும் காலையிலும் மாலையிலும் மும்மூன்று முறை ஓதி வரவும் அதனை தொடர்ச்சியாக பதிந்து வரவும் ஆலோசனை வழங்குங்கள்

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : அல்குர்ஆனை மனனமிட்டு ஒப்புவிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸூரதுல் பீலின் பதவிளக்கத்தை கூறுவார்.
- ஸூரதுல் பீல் இறங்கிய காரணத்தை தொகுத்து கூறுவார்.
- ஸூரதுல் பீல் புகட்டும் படிப்பினையை அறிந்து கூறுவார்.
- ஸூரதுல் பீல் கூறும் வரலாற்றுப் பாடத்தை அறிந்து மற்றையவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.
- தனது ஈமானை வலிமைப்படுத்திக் கொள்வதற்காக இந்த ஸூராவை ஓதிக் கருத்தறிந்து வருவார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ஸூரா அல் பீலை அழகாக ஓதும் ஒருமாணவனைக் கொண்டு ஓத வையுங்கள் அல்லது ஒலிநாடா மூலம் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ஸூரா எடுத்துக் காட்டும் விடயத்தினையும் வரலாற்று நிகழ்வையும் தொடர்புபடுத்தி கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இது மக்காவில் இறக்கப்பட்ட அல்குர்ஆனின் சிறிய ஸூராக்களில் ஒன்றாகும்.
    - இந்த ஸூரா அருளப்பட்டமைக்கு வரலாற்றுப் பின்னணி ஒன்று உண்டு.
    - எல்லா வகையான சூழ்ச்சிகளையும் அல்லாஹ் முறியடிக்க கூடியவன் என்பதை இந்த ஸூரா உணர்த்துகிறது.
    - இது ஜாஹிலியாக் கால அரபு மக்களின் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை உண்மைப்படுத்தும் ஸூராவாக உள்ளது.
    - இதனை ஓதுவது, மனனமிடுவது, அதன் பொருள் பற்றி அறிந்து கொள்வது போன்றன சிறந்த செயல்களாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - மக்காவில் அருளப்பட்ட இந்த ஸூரா வரலாற்றுச் சம்பவமொன்றின் மூலம் அல்லாஹ்வின் வல்லமையை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.
    - க.்.பாவுக்குரிய ரப்பு அதனைப் பாதுகாப்பான் என்ற ஜாஹிலியா மக்களின் நம்பிக்கையை இந்த ஸூரா உண்மைப்படுத்துகிறது.
    - அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை இந்த ஸூரா வலுப்படுத்துகிறது.
    - எல்லா விதமான சூழ்ச்சியும் அல்லாஹ்வுக்கு முன்னால் அற்பமானது என்பதை இது உணர்த்துகிறது.
    - இந்த ஸூராவை தஜ்வீத் முறைப்படி ஓதுவதும் மனனமிட்டுக் கொள்வதும் அதன் கருத்தை விளங்கி ஈமானை வலிமை பெறச் செய்து கொள்வதும் சிறந்த செயல்களாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஸூரதுல் பீலின் பின்னணியிலுள்ள வரலாற்றச் சம்பவத்தில் அபாபீல் பறவைகள் கல்லெறியும் காட்சியை வரைந்து காட்டுங்கள்.

குழு-2 ஸூரதுல் பீலின் பின்னணியில் உள்ள வரலாற்றுச் சம்பவத்தை சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்.

குழு-3 ஸூரதுல் பீலின் பின்னணியில் உள்ள வரலாற்றுச் சம்பவத்தில் யானைப் படையின் வருகையை படமாக வரைந்து காட்டுங்கள்.

குழு-4 ஸூரதுல் பீலை ஓதும்போது உங்களது உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளைக் கலந்துரையாடி ஓர் ஆக்கத்தை தயாரியுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

‘‘அபாபீல்’’ என்ற இறுவட்டை வீட்டில் பெற்றோருடன் சேர்ந்து பார்வையிடவும் அதன் மூலம் கற்றுக்கொண்டவற்றை கதையாக எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 : ஹதீஸ் ஒரு சட்ட மூலாதராரம் என்பதை விளக்குவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஹதீஸ் சட்ட மூலாதாரம் என்பதை விளக்குவார்.
- ஹதீஸின் வகைகளை அட்டவணைப்படுத்துவார்.
- குர்ஆனை விளங்கிக்கொள்ள ஹதீஸ் அவசியம் என்பதை எடுத்துக்காட்டுவார்.
- குர்ஆன் ஹதீஸுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை எடுத்துக்கூறுவார்.
- ஹதீஸ் போதனைகளை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸை மாணவர் ஒருவரைக்கொண்டு வாசிக்கச் செய்து ஏனையோரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

  “நான் உங்களுக்கு மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றி ஒழுகும் காலமெல்லாம் வழி தவறமாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதமும் (குர்ஆன்) எனது வழிமுறையும் (அல்ஹதீஸ்) ஆகும்.” (முவத்தா)

- ஹதீஸ் பற்றி மாணவர்களிடம் வினவி கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - ஹதீஸ் இஸ்லாத்தின் மூலாதரங்களில் ஒன்றாகும்.
  - ஹதீஸை ஸுன்னா எனவும் வழங்குவார்.
  - ஹதீஸ் அல்லது ஸுன்னா நபி (ஸல்) அவர்களுடைய முழு வாழ்க்கை வழிமுறையையும் குறிக்கின்றது.
  - குர்ஆனுக்கு விளக்கமாக ஹதீஸ்கள் அமைகின்றன.
  - ஹதீஸ்கள் இமாம்களால் தரப்படுத்தப்பட்டுள்ளன.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - ஹதீஸ் என்பது நபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம், பண்புகள், வர்ணனைகள் என்பவற்றைக் குறிக்கின்றது.
    - அது இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்களுள் ஒன்றாகும்.
    - குர்ஆனின் போதனைகளுக்கு ஹதீஸ் செயல் வடிவம் கொடுக்கிறது.
    - குர்ஆன் அல்லாஹ்வினது கருத்தையும் மொழிநடையையும் தாங்கி வருகின்றது.
    - அல்லாஹ்வின் கருத்தையும் நபி (ஸல்) அவர்களின் மொழிநடையையும் தாங்கிவரும் ஹதீஸ், ஹதீஸுல் குத்ஸி எனப்படுகின்றது.
    - மொழிநடையும் கருத்தும் நபி (ஸல்) அவர்களுடையதாக அமைபவை ஹதீஸுன் நபவி எனப்படுகின்றது.
    - ஹதீஸ்களில் ஸஹீஹ், ஹஸன், ழஈப் என 3 பிரிவுகள் உள்ளன.
    - ஹதீஸ்களைப் பின்பற்றுவதும், அதனைப் பாதுகாப்பதும் போதிப்பதும் எமது கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஹதீஸின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் இரண்டு குர்ஆன் வசனங்களைத் தர்ஜமதுல் குர்ஆனில் தேடி அதன் பொருளையும் எழுதுங்கள்.

**குழு-2** குழு அங்கத்தவர்கள் மனனமிட்டுள்ள ஹதீஸ்கள் மூன்றை அரபியில் எழுதி அவற்றின் பொருளையும் எழுதுங்கள்.

**குழு-3** குர்ஆனுக்கு விளக்கவுரையாக ஹதீஸ் அமைகின்றது என்பதற்கு இரண்டு உதாரணங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-4** ஹதீஸின் சிறப்பைக் கூறும் மிகப் பொருத்தமான ஹதீஸ்கள் மூன்றைத் தேடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

பெற்றோருடன் அல்லது வீட்டிலுள்ள மூத்தோருடன் கலந்துரையாடி எவையேனும் மூன்று சிறிய ஹதீஸ்களை பொருளுடன் எழுத அறிவுறுத்துங்கள்.

தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 4.5 : ஹதீஸ்களை மனனமிட்டு ஒப்புவிப்பார்

பாடவேளை : 2

கற்றல் பேறுகள்:

- ஹதீஸின் ஏவல்களையும் விலக்கல்களையும் அறிந்து நடைமுறைப்படுத்துவார்.
- பொய் பேசுவது முனாபிக்குகளின் பண்பு என்பதை அறிந்து அதிலிருந்து விலகி இருப்பார்.
- பட்டப் பெயர் சூட்டுதல் தடுக்கப்பட்ட காரியம் என்பதை அறிந்து தானும் அதிலிருந்து தவிர்ந்து பிறரையும் தடுத்துக் கொள்வார்.

பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:

படி 1 :
- கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸ்களை மாணவர் ஒருவரைக்கொண்டு வாசிக்கச் செய்து செவிமடுக்கச் செய்யுங்கள்.

  அறிஞனாக அல்லது கற்பிப்பவனாக அல்லது செவிமடுப்பவனாக அல்லது கல்வியை நேசிப்பவனாக இரு. ஐந்தாமவனாக இருந்துவிடாதே. இன்றேல் அழிந்து விடுவாய்.” (தபரானி)
- ஹதீஸ் பற்றி மாணவர்களிடம் வினவி கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஏவல்களுக்கு உட்பட்டும், விலக்கல்களிலிருந்து தவிர்ந்தும் வாழ்வது முஸ்லிமினது கடமையாகும்.
  - பொய் பேசுதல், பட்டப் பெயர் சூட்டுதலை ஹதீஸ் தடுக்கின்றது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், கடதாசிகள், நிறப்பேனாக்களை வழங்குங்கள்.
- ஓவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப்பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

  - அல்குர்ஆனும் ஸுன்னாவும் ஏவல்களைப் போதிக்கின்றன. கல்வியை தேடிக் கற்கும்படி போதிப்பதை உதாரணமாகக் கொள்ளலாம்.

    கல்வி தொடர்பான விடயங்களில் நீங்கள் ஒருவருக்கொருவர் தூய்மையாக நடந்து கொள்ளுங்கள். உங்களில் ஒருவர் தனது செல்வத்தில் செய்கின்ற மோசடியை விட அறிவில் செய்கின்ற மோசடி மிகப் பாரதூரமானது. நிச்சயமாக அல்லாஹ் மறுமையில் உங்களை விசாரிப்பான்.'' (தபரானி)

  - அல்குர்ஆனும் ஸுன்னாவும் விலக்கல்களை முன்வைத்து எச்சரித்துள்ளன. பொய், பட்டப் பெயர் சூட்டுதல் போன்றவை தடுக்கப்பட்டுள்ளன.

    reNj fjj;jpw;fpkhd twpw tpbL tpLqfs; Vnddpy;> czi;k jpUgj;jpaj; (mi kjpa) jUk; ngha; reNj fqf;Sf;F topFff;Fk;||

    czi; kNa NgRqf;s; mjpy; j;hd; cqf;s;mopNt ,Uggj;hf nj;upej;hYk; rupNa! Vnddpy;> mjpy;j;hd; ,Wj;pay;cqf;s; <Nl wywk;,Uff;pd;wJ.||

  - பொய் பேசுபவனுக்கு அழிவே கிட்டுமென அல்குர்ஆன் கூறுகிறது.

  - பொய் தீமையின்பால் இட்டுச் செல்லுமென ஹதீஸ் கூறுகின்றது.

  - ஒருவர் மற்றவருக்கு பட்டப் பெயர் சூட்ட வேண்டாம். பட்டப் பெயர் சூட்டுவது கெட்ட பாவம் என அல்குர்ஆன் கூறுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஹதீஸின் ஏவல்களையும் விலக்கல்களையும் பின்பற்றுமாறு வலியுறுத்தும் குர்ஆன் வசனமொன்றைக் குறிப்பிடுங்கள்.

குழு-2 பொய்யிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் எனக் கூறும் ஹதீஸ் ஒன்றை எழுதுங்கள்.

குழு-3 கல்வியைத் தேடிக் கற்பது தொடர்பான ஹதீஸ்களை எழுதுங்கள்.

குழு-4 பட்டப் பெயர் சூட்டுவதைத் தடுக்கும் ஹதீஸ் ஒன்றை எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் உண்மைபேசி கள்வர்களைத் திருத்திய சம்பவத்தை தேடியெழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பு, இளமைப்பருவம் தொடர்பாக அறிந்து விளக்கிக் காட்டுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபி (ஸல்) அவர்கள் பிறந்த அரபு நாட்டின் சமூக நிலையை எடுத்துக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களின் இளமைக்கால துயரங்களை உணர்வுபூர்வமாக எடுத்துக் கூறுவார்.
- இளமையிலும் நபி (ஸல்) அவர்கள் சிறந்த பண்புகளோடு வாழ்ந்து காட்டியதை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வார்.
- நபி (ஸல்) அவர்களின் இளமை வாழ்வில் பங்கேற்ற மூத்தோர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- இணைப்பு 01 இல் உள்ள பாடலை சேர்ந்து பாட விடுங்கள்.
- பாடலின் பொருள் பற்றி கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - முஹம்மத் (ஸல்) அவர்கள் அரபு நாட்டில் மக்கா நகரில் பிறந்தார்கள்.
    - அவர் பிறக்க முன் தந்தையையும், பிறந்து ஆறு வயதில் தாயையும் இழந்தார்கள்.
    - முதலில் பாட்டனாரிடமும், பின்னர் பெரிய தந்தையிடமும் வளர்ந்தார்கள்.
    - ஹலீமா என்ற பெண் செவிலித்தாயாக அமர்ந்தார்.
    - சிறுவயதிலேயே அவர்களிடம் நல்ல பண்புகள் காணப்பட்டன.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் குழுச் செயற்பாடுகளை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - ஆமுல் பீல் என்பதன் கருத்து.
    - அய்யாமுல் ஜாஹிலிய்யாவின் நிலை.
    - இளமையில் முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூக நடவடிக்கைகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 இணைப்பு 1 இல் காணப்படும் பாடல் தொகுதியைப் பார்த்து, பிறப்பு முதல் அவர்களை வளர்ப்பதில் பங்கேற்றோர் பெயர்களை எழுதுங்கள்.

குழு-2 நபி (ஸல்) அவர்கள் செய்த தொழில்களையும் அவர்களிடம் காணப்பட்ட பண்புகளையும் எடுத்துக் காட்டுங்கள்.

குழு-3 நபி (ஸல்) அவர்கள் பிறந்த இடம், குலம், மனைவி, பயணம் செய்த இடம் என்பவற்றை பாடல் தொகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-4 பாடலில் குறிப்பிடப்படும் நபி (ஸல்) அவர்களின் சிறப்புப் பெயர்களைக் கண்டறிந்து அதற்கான காரணங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

நபி (ஸல்) அவர்களின் பிறப்பு, இளமைக் காலம் பற்றிய ஏதேனும் ஒரு நிகழ்வு தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடி அதனை எழுதி வருமாறு அறிவுறுத்துங்கள்.

**இணைப்பு : 1**

**பாடல்**

மக்கா எனும் ஊரினிலே
மாண்பார் நபிமணி பிறந்தார்கள்.
குறைஷி என்னும் பெயர் பூண்ட
குலத்தில் அன்னார் உதித்தார்கள்.
அன்னார் தந்தை அப்துல்லாஹ்
அருமைத்தாயார் ஆமினாவாம்.
முஹம்மத் என்னும் திருப்பெயரால்
மகிழ்ந்தே அழைக்கப்பட்டார்கள்.
மகிமை முஹம்மத் பிறக்குமுன்னர்
மறைந்தார் தந்தை அப்துல்லாஹ்.
அரபு மரபில் ஹலீமாவே
அவரின் செவிலித் தாயானார்.
அண்ணல் அவரின் வயதாறில்
அன்னை மறைந்து விட்டார்கள்.
பாட்டன் அப்துல் முத்தலிபின்
பாதுகாப்பில் வளர்ந்தார்கள்.
எட்டாம் வயதில் பாட்டனாரும்
இறந்த போது அபூதாலிப்
எனும் பெரிய தந்தையவர்
கண்ணாய் காத்து வந்தார்கள்.
வாலிப வயதில் ஆடுகளை
வளர்க்கும் தொழிலை செய்தார்கள்.
நம்பிக்கைக்கு உரியவராய்
நாளும் நடந்து வந்ததனால்,
அல்அமீன் என்றே எல்லோரும்
செல்லப்பெயரால் அழைத்தார்கள்.
உண்மை பேசி ஒளிர்ந்ததனால்
உயர்வாம் ஸாதிக் என்றார்கள்.
கோமான் அவரின் குணச்சிறப்பால்
குளிர்ந்தே மலர்ந்த கதீஜாவும்
பூமான் அவரை வியாபாரப்
பொருளை கொடுத்து பொறுப்பாக்கி
சிரியா என்னும் ஊருக்கு
சிறப்பாய் அனுப்பி வைத்தார்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : நபி (ஸல்) அவர்களின் இளமைக் கால முன்மாதிரிகளை விளங்கிக் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- முஹம்மத் (ஸல்) அவர்களின் வாலிபப்பருவம் கழிந்த முறையை எடுத்துக் கூறுவார்.
- அவர்கள் ஹிறாவுக்கு சென்ற நிகழ்வையும், அதன் பெறுபேற்றையும் விளக்கிக் காட்டுவார்.
- அவர்களது பிரசார முறையையும் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களையும் எடுத்துக் கூறுவார்.
- மக்கா வாழ்க்கைப் பகுதியின் விளைவை எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- இணைப்பு 1 இலுள்ள பாடலை சேர்ந்து பாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - நபி (ஸல்) அவர்களின் வாழ்வை மக்கா வாழ்க்கைப்பகுதி, மதீனா வாழ்க்கைப்பகுதி என இரண்டாக வகுக்கலாம்.
    - மக்கா வாழ்க்கைப்பகுதியை நுபுவ்வத்துக்கு முந்திய பகுதி நுபுவ்வத்துக்கு பிந்திய பகுதி என இரண்டாக வகுக்கலாம்.
    - நுபுவ்வத்துக்கு முந்திய பகுதியில் நபி (ஸல்) அவர்களின் அழகிய பண்புகள் வெளியாகின. அவர்கள் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார்கள்.
    - நுபுவ்வத்துக்கு பிந்திய பகுதியில் அவர்கள் இஸ்லாத்தின் தூதை எடுத்துரைப்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள்.

**படி 2 :**

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச் செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - நபி (ஸல்) அவர்கள் தமது வாலிபப் பருவத்தை பெரிய தந்தை அபூ தாலிபுடன் கழித்தார்கள், ஆடு மேய்த்தார்கள், வியாபாரத்துக்கும் சென்றார்கள்.

- கதீஜா (றழி) அவர்களின் வணிக முகவராகப் பணியாற்றினார்கள்.
- பின்னர் கதீஜா (றழி) அவர்கனை மணமுடித்து குடும்ப வாழ்க்கை நடத்தினார்கள்.
- சமூக சீர்திருத்தத்தை விரும்பி ஹிறாவில் தனித்திருந்து விடிவு காண முனைந்தார்கள்.
- அப்போது அவர்களுக்கு வஹி கிடைத்தது. அவர்கள் நபியாக பணியாற்றினார்கள்.
- இக்காலத்தில் பல சவால்களை எதிர்கொண்டார்கள்.
- அவற்றை முறியடிக்க பல வழிமுறைகளை கையாண்டார்கள்.
- இறுதியாக நாட்டைவிட்டு வெளியேறினார்கள். அந்த நிகழ்வு ஹிஜ்ரத் எனப்படுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நபி (ஸல்) அவர்களின் வாலிபம் எவ்வாறு கழிந்தது என்பதைக் கலந்துரையாடி எடுத்துக் காட்டுங்கள்.

**குழு-2** நபி (ஸல்) அவர்களுக்கு ஹிறாவில் நுபுவ்வத் கிடைத்த நிகழ்வை கலந்துரையாடி எடுத்துக் காட்டுங்கள்.

**குழு-3** நபி (ஸல்) அவர்களின் ஆரம்ப கட்டப் பிரசாரம் எவ்வாறு அமைந்தது என்பதை கலந்துரையாடி எடுத்துக் காட்டுங்கள்.

**குழு-4** பிரசார காலத்தில் நபி (ஸல்) அவர்கள் அனுபவித்த துன்பங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-5** நபியவர்கள் ஹிஜ்ரத் செய்த பின்னணியை கலந்துரையாடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

நபி (ஸல்) அவர்களுக்கு வஹி அருளப்பட்ட நிகழ்வு பற்றி வீட்டிலுள்ள மூத்தோருடன் கலந்துரையாடி எழுதி வாருங்கள்.

## (இணைப்பு 1)

### கவிதை

நம்பிக்கையாய் நாணயமாய்
நன்முறை வாணிபம் செய்தன்னார்
நயமாய் சேர்த்து வந்ததனை
நயந்து மகிழ்ந்த கதிஜாவும்
விரும்பி எங்கள் முஹம்மதரை
திருமணம் செய்து கொண்டார்கள்.
வாலிபரான முஹம்மதவர்
சோலிகள் நீக்கி தனித்திருக்க
ஹிறா மலையை நாடினரே.
கிரமமாய்த் தியானித்திருந்தனரே
ஒரு நாள் ஜிப்ரீல் வந்தங்கு
ஓதுக என்றே உரைத்தார்கள்
ஓதத்தெரியேன் எவ்வாறு
ஓதிடுவேனென அவர் கேட்க
உங்கள் இறையின் திருப்பெயரால்
ஓதிடுக என்றே அவருரைக்க
உத்தமரன்னார் ஓதினரே
உயர்வாய் நபித்துவம் உரித்ததுவே
நானிலந்தனக்கொரு நபியெனவே
கோனிறையவனைத் தெரிந்தோனே
வணங்கப்படுவோன் அல்லாஹ்வே
வணங்க வேண்டாம் வேறெதையும்
இணங்கும் இறையின் தூதுவராய்
என்னை அவனே அனுப்பியுள்ளான்
எனினும் தீயோர் அன்னார்க்கு
இன்னல் மிகவும் செய்தார்கள்
ஏசிப்பேசிப்பழித்தார்கள்
தாயிப் என்னும் நகருக்கு
தகைமை நபியோ இஸ்லாத்தை
போதிப்பதற்கு செல்கையில்
பொல்லாச் சிறுவர் கல்லாலே
எங்கள் நபிக்கு எறிந்தனரே
இரத்தம் ஓடத்துரத்தினரே
இன்னல் செய்தோர் அனைவரையும்
மன்னர் நபிகள் மன்னித்தார்கள்
தீயோர் தொல்லை தொடர்ந்ததனால்
தூய நபியும் தோழர்களும்
எழிலார் மதீனா ஏகினரே
ஒளிலார் நெறியைப் பரப்பினரே
-மழலைச் செல்வம்
(கவிஞர் எம்.எச்.எம். புகாரி)-

தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.

தேர்ச்சி மட்டம் 5.3 : நபி (ஸல்) அவர்களின் இளமைக் கால முன்மாதிரிகளை விளங்கிக் கடைப்பிடிப்பார்.

பாடவேளை : 2

**கற்றல் பேறுகள்:**

- முஹம்மத் (ஸல்) அவர்கள் சிறந்த மகனாக, தந்தையாக, கணவனாக, ஆசிரியராக, சீர்திருத்தவாதியாக காணப்பட்டார்கள் என்பதனை நிகழ்வுகளுக்கூடாக எடுத்துக்காட்டுவார்.
- அவர்களை ஒவ்வொரு துறையிலும் தமது வழிகாட்டியாக ஏற்று நடந்து காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இலுள்ள நிகழ்வை ஒரு மாணவர் மூலம் வாசித்துக் காட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - அல்லாஹ்வின் தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி காணப்படுகின்றது என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.
    - நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் எமக்கு வழிகாட்டல்களாக அமைந்துள்ளன.
    - நபி (ஸல்) அவர்கள் வாழ்வு எல்லாத் துறைக்குமான வழிகாட்டல்களைக் கொண்டுள்ளது..

படி 2 :
- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்
- அறிக்கை சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச் செயற்பாடுகளை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறைநிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்ளை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - நபி (ஸல்) அவர்கள் இளமையிலே தாய், தந்தையரை இழந்தாலும் கூட செவிலித்தாய் ஹலீமா, வளர்ப்புத்தாய் பாத்திமா பின்த் அஸத் (றழி), பெரிய தந்தை அபூதாலிப் ஆகியோருக்கு சிறந்த மகனாக செயற்பட்டார்கள்.
    - நபி (ஸல்) அவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சிறந்த தந்தையாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.
    - நபி (ஸல்) அவர்கள் தமது மனைவியருக்கு சிறந்த கணவனாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு சிறந்த ஆசிரியராக நடந்து காட்டியுள்ளார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் தாம் வாழ்கின்ற காலத்தில் சிறந்த சீர்திருத்தவாதியாக நடந்து காட்டியுள்ளார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நபி (ஸல்) அவர்கள் சிறந்த மகனாக இருந்தார்கள் என்பதற்கு இரண்டு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-2** நபி (ஸல்) அவர்கள் சிறந்த தந்தையாக இருந்தார்கள் என்பதற்கு இரண்டு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-3** நபி (ஸல்) அவர்கள் சிறந்த ஆசிரியராக இருந்தார்கள் என்பதற்கு இரண்டு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-4** நபி (ஸல்) அவர்கள் சிறந்த கணவனாக இருந்தார்கள் என்பதற்கு இரண்டு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-5** நபி (ஸல்) அவர்கள் சிறந்த சீர்திருத்தவாதியாக இருந்தார்கள் என்பதற்கு இரண்டு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

நபி (ஸல்) அவர்கள் சிறுவர்களுடன் எவ்வாறு முன்மாதிரியாக நடந்து கொண்டார்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு சம்பவத்தை தேடி எழுத வழிப்படுத்துங்கள்.

**(இணைப்பு 1)**

வரலாற்று நிகழ்வு

நபி (ஸல்) அவர்கள் முதல் வஹியைப் பெற்று அதிர்ச்சியடைந்த நிலையில் வீட்டுக்கு வந்தார்கள். “என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்’’ என மனைவி கதீஜாவைக் கெஞ்சினார்கள்.

உங்களுக்கு என்ன நடந்ததென வினவிக் கொண்டே போர்வையால் போர்த்தினார்கள்.

நபியவர்கள் ஹிறாவில் நடந்த அனுபவத்தைக் கூறி எனக்கு என்ன நடக்கப் போகிறதோ என அஞ்சுகிறேன் என அவதிப்பட்டார்கள்.

இதைக் கேட்ட மனைவி கதீஜா (ரழி) அவர்கள், “நீங்கள் கவலைப்படாதீர்கள். அல்லாஹ் மீதாணையாக அல்லாஹ் உங்களை ஒரு போதும் கைவிடமாட்டான்; இழிவுபடுத்தமாட்டான். ஏனெனில், நீங்கள் உறவினர்களுடன் இணங்கி நடக்கிறீர்கள், சிரமப்படுவோரின் சுமைகளைத் தாங்கிக் கொள்கிறீர்கள், ஏழைகளுக்கு உதவுகிறீர்கள், விருந்தினரை உபசரிக்கிறீர்கள், சோதனைகளில் சிக்கியோரை விடுவிக்கிறீர்கள், எனவே உங்களுக்கு எந்தத் தீங்கும் நேராது’’ என ஆறுதல் கூறினார்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.4.1 : உம்மஹாத்துல் மு.ஃமினீன்களின் வாழ்வு முறையை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- நபி (ஸல்) அவர்களுக்கும் கதீஜா (ரழி) அவர்களுக்குமிடையில் திருமணம் நிகழ்ந்த பின்னணியை எடுத்துக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களுக்கும் கதீஜா (ரழி) அவர்களுக்கும் கிடைத்த பிள்ளைகளின் பெயர்களை பட்டியல்படுத்துவார்.
- கதீஜா (ரழி) அவர்கள் இஸ்லாத்துக்குச் செய்த பணிகளை உரையாக முன்வைப்பார்.
- கதீஜா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- இணைப்பு 1 இலுள்ள பாடலை இருமுறை மாணவர்களோடு சேர்ந்து பாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - கதீஜா (ரழி) அவர்கள் மக்காவில் வளர்ந்த ஒரு செல்வச் சீமாட்டியாவார். அவரது கணவன் மரணித்தபின்னர் இரண்டு பிள்ளைகளுடன் விதவையாக வாழ்ந்து வந்தார்கள். சிறிது காலத்தில் அவரது தந்தையும் மரணித்து விட்டார்கள்
  - இதனால் அவரது வணிகத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கு ஓர் ஆண் துணையை எதிர்பார்த்தார்கள்.
  - அதற்குப் பொருத்தமானவராக அல்அமீன் என்றும் அஸ்ஸாதிக் என்றும் பாராட்டப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச் செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழவினரின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச்செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - கதீஜா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் முதல் மனைவி ஆவார். கதீஜா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களை மணமுடிக்கும்போது அவர்களுக்கு வயது 40 ஆகும். நபி (ஸல்) அவர்களின் வயது 25 ஆகும்.

- அவர்கள் இருவருக்கும் ஆறு பிள்ளைகள் கிடைத்தனர்.
- அவர்கள் இருவரினதும் குடும்ப வாழ்வு சுமுகமாக அமைந்தது.
- நபி (ஸல்) அவர்கள் சமூகப் பணியில் ஈடுபட்டபோது கதீஜா (ரழி) அவர்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு வஹி இறங்கிய அதிர்ச்சியின் போதும் வேறு சந்தர்ப்பங்களிலும் ஆறுதல் வழங்கியுள்ளார்கள்.
- முதன் முதலாவதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர் என்ற அந்தஸ்த்தைப் பெற்றுள்ளார்கள்.
- தமது நேரத்தையும் செல்வத்தையும் இஸ்லாத்துக்காக அர்ப்பணித்தார்கள்.
- ஷி∴பு அபூ தாலிபில் ஒதுக்கி வைக்கப்பட்டபோது ஏனையவர்களுடன் கூடவே இருந்தார்கள்; உதவினார்கள். அதிலிருந்து வெளியாகிய நுபுவ்வத் 10ஆம் ஆண்டே அவர்கள் வபாத்தானார்கள்.
- கதீஜா (ரழி) அவர்களின் அர்ப்பணிப்புக்களை அவர்கள் மரணித்த பின்னரும் நபியவர்கள் நன்றியுணர்வுடன் பாராட்டி வந்தார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 கதீஜா (ரழி) அவர்களின் குடும்பம் பற்றி ஒரு பந்தியை எழுதிக் காட்டுங்கள்.

குழு-2 கதீஜா (ரழி) அவர்கள் நபியவர்களுக்குச் செய்த உதவிகள், ஒத்துழைப்புகள் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுங்கள்.

குழு-3 கதீஜா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைக் குறிப்பிட்டு உங்கள் சகோதரிக்கு கடிதம் ஒன்றை எழுதுங்கள்.

குழு-4 கதீஜா (ரழி) அவர்கள், ஏனைய உம்மஹாதுல் மு∴மினீன்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

கதீஜா (ரழி) அவர்களைப் பற்றி நீங்கள் படித்ததை பெற்றோருக்கு எடுத்துக் கூறி அவர்கள் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்று எழுதி உங்கள் பாட ஆசிரியரிடம் சமர்ப்பியுங்கள்.

**பாடல்** **(இணைப்பு 1)**

நாயகியார் கதீஜாவின்
நல் வாணிபத்துறையில்
நேயமுடன் நேர்மையினை
நிரூபித்த நாயகமே
கதீஜாவின் நாயகராய்
திருமணத்தைச் செய்த பின்னர்
புதிதாக ஒரு வலிமை
புகழ் பெற்றீர் நாயகமே
பெண்ணினத்தின் பெரும் பயனாய்
பேரறிவின் நிலைக்களனாய்
கண்ணான பாத்திமுத்தைக்
கண்டெடுத்த நாயகமே

-நாயகமே (பேராசிரியர் அப்துல் கபூர்)-

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்**

**தேர்ச்சி மட்டம் 5.4.2 : உம்மஹாதுல் மு∴மினீன்கள் வாழ்ந்த முறையை அறிந்து கூறுவார்**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபி (ஸல்) அவர்களுக்கும் அபூபக்ர் (ரழி) அவர்களின் குடும்பத்துக்குமிடையிலான தொடர்பை எடுத்துக் கூறுவார்.
- ஆயிஷா (ரழி) அவர்களின் தனிச் சிறப்புகளை பட்டியற்படுத்துவார்.
- ஆயிஷா (ரழி) அவர்கள் இஸ்லாத்துக்குச் செய்த பணிகளை கதிஜா (ரழி) அவர்களின் பணியோடு ஒப்புநோக்குவார்.
- ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இலுள்ள சம்பவத்தை மாணவர் மூலம் வாசிக்கச் செய்யுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - அன்னை ஆயிஷா (ரழி), அபூபக்ர் (ரழி)- உம்மு றூமன் (ரழி) தம்பதியின் புதல்வியாவார்.
    - சிறுவயது முதல் நபி (ஸல்) அவர்களை அறிந்திருந்தவர்.
    - சிறுவயதிலேயே இஸ்லாமிய அறிவும், பண்பும் கிடைக்கப் பெற்றவர்.
    - நபி (ஸல்) அவர்களின் இளம் மனைவி.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் தமது குழுச் செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுவினரின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறைநிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - ஆயிஷா (ரழி) நுபுவ்வத் 02 இல் மக்காவில் பிறந்தார்கள்.
    - பெற்றோர் மூலமாக இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டார்கள்.
    - கதீஜா (ரழி) வபாத்தான பின்னர் நபியவர்களால் மணமுடிக்கப்பட்டார்கள்.
    - உம்முஹாத்துல் மு∴மினீன்களில் அறிவுக் கூர்மையுடையவர்.
    - நபி (ஸல்) அவர்களிடம் கேட்டு அறிவை விரிவுபடுத்திக் கொண்டார்கள்.
    - அல்லாஹ் மீது உறுதியாக நம்பிக்கை கொண்டவர்.

- நபி (ஸல்) அவர்கள் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.
- எளிமையாக வாழ்வை மேற்கொண்டவர்; எனினும் தர்மம் செய்து வாழ்ந்தவர்.
- ஸஹாபாக்கள் கூட இவர்களிடம் கற்றுக் கொண்டார்கள்.
- பெண்களில் அதிகமாக ஹதீஸ்களை ரிவாயத் செய்தவர்.
- நபி (ஸல்) அவர்கள் மரணித்த பின்பும் நீண்ட காலம் வாழ்ந்தார். (மரணம் ஹிஜ்ரி 58)
- அவரில் பெண்களுக்கான முன்மாதிரிகள் நிறையவே காணப்படுகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஆயிஷா (ரழி) அவர்களிடம் காணப்பட்ட தனித் தன்மைகள் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரிகள் குறித்து கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-3** ஆயிஷா (ரழி), கதீஜா (ரழி) ஆகிய இருவருக்குமிடையிலான வேறுபாடுகள் பற்றி கலந்துரையாடி பட்டியல்படுத்துங்கள்.

**குழு-4** நபியவர்களின் வபாத்துக்குப் பின்னர் ஆயிஷா (ரழி) அவர்களின் நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு:**

அன்னை ஆயிஷா (ரழி) அவர்களுக்கும் நபி (ஸல்) அவர்களுக்குமிடையிலான நெருங்கிய தொடர்பை எடுத்துக் காட்டும் இரு சம்பவங்களை பெற்றோரிடம் கேட்டு எழுதி ஆசிரியரிடம் கையளியுங்கள்.

**(இணைப்பு 1)**

**சம்பவம்**

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள், தோழர் ஆபூபக்ர் (ரழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு ஒரு சிறுமி பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார். அதிலொரு பொம்மை குதிரை வடிவத்திலிருந்தது. அதன் இரு பக்கங்களிலும் சிறகுகள் காணப்பட்டன.

சிறுமியை நெருங்கிய நபி (ஸல்) அவர்கள், ‘‘இது என்ன பொம்மை’’ எனக் கேட்டார்கள் ‘‘இது குதிரைப் பொம்மை’’ என சிறுமி விடையளித்தாள். ‘‘குதிரைகளுக்கு சிறகு இருக்காதே’’ நபி (ஸல்) அவர்கள் மீண்டும் கேட்டார்கள். ‘‘ஏன் சுலைமான் (அலை) அவர்களின் குதிரைக்கு சிறகுகள் இருக்கவில்லையா? என்று சிறுமி அடுத்த கேள்வியை எழுப்பினாள். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தவர்களாக அப்பால் நகர்ந்தார்கள்.

அந்தச் சிறுமியே ஆயிஷா (ரழி) ஆவார்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 5.0** | : | **நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்** |
| **தேர்ச்சி மட்டம் 5.5** | : | **ஸஹாபாக்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார்** |
| **பாடவேளை** | : | **2** |

**கற்றல் பேறுகள்:**

- ஸைத் இப்னு தாபித் (ரழி) அவர்களின் கற்றல் திறனையும் ஆர்வங்களையும் கண்டறிந்து கூறுவார்.
- அவர்களின் பங்களிப்புக்களை மதிப்பீடு செய்து விளக்கமளிப்பார்.
- குர்ஆனை நூலுருப்படுத்துவதில் அவரது பணியை விளக்குவார்.
- சமூக தேவையை அறிந்து அதற்கேற்ப செயற்படும் முறையினை அறிந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இலுள்ள பிரவேசக்குறிப்பை ஒரு மாணவன் மூலம் உரத்து வாசிக்கச் செய்யுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபியவர்களின் ஸஹாபாக்கள், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பங்கேற்றார்கள்.
  - அவர்களிற் சிலர் அல்குர்ஆனிலும், வேறு சிலர் ஹதீஸிலும், மற்றும் சிலர் சட்டத்துறையிலும் நிபுணத்துவம் பெற்றனர்.
  - அவர்களுள் ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்கள் மொழி, குர்ஆனிய துறைகளில் சிறப்புற்றிருந்தார்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்க தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச் செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்கள் ஓர் அன்ஸாரி ஆவார்.
  - சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்த அனாதையாவார்.
  - நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்தபோது அவருக்கு 10 வயது தாண்டியிருந்தது.
  - நபியவர்களை சந்திக்கும் முன்பே 17 ஸூராக்களை மனனமிட்டிருந்தார். பத்ரில் பிடிபட்ட கைதியிடம் எழுத வாசிக்க கற்றார்.

- நபி (ஸல்) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 15 நாட்களில் அபராணி மொழியையும் 17 நாட்களில் சுர்யாணி மொழியையும் கற்றார். நபி (ஸல்) அவர்களின் கடிதத் தொடர்புகளுக்கு பொறுப்பாக அமர்த்தப்பட்டார். நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து ரமழானில் ஜிப்ரீல் (அலை) முன்னிலையில் குர்ஆன் ஓதுவதை கேட்டு வந்தார்.
- வாரிசுரிமை பற்றிய அறிவிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப்பின் அல்குர்ஆனை நூலுருப்படுத்தும் பணிக்கு தலைமை வகித்தார்.
- ஹிஜ்ரி 45இல், 60ஆம் வயதில் வபாத்தானார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஸைத் (ரழி) அவர்களின் மனனமிடும் ஆற்றல் பற்றிக் கலந்துரையாடி சில வசனங்கள் எழுதுங்கள்.

**குழு-2** ஸைத் (ரழி) அவர்கள் பல மொழிகளைக் கற்றது பற்றிக் கலந்துரையாடி சில வசனங்கள் எழுதுங்கள்.

**குழு-3** ஸைத் (ரழி) அவர்களின் கல்வி தேடல் பற்றி கலந்துரையாடி சில வசனங்கள் எழுதுங்கள்.

**குழு-4** ஸைத் (ரழி) அவர்களால் அல்குர்ஆன் நூலுருவில் தொகுக்கப்பட்ட முறையை கலந்துரையாடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

ஸைத் பின் தாபித் (ரழி) அவர்களை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் எனக் கோரும் துண்டுப் பிரசுரமொன்றை வீட்டில் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**(இணைப்பு 1)**

முஸ்லிம்களைத் தாக்குவதற்காக குறைஷிகள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்து கொண்டிருந்தார்கள். இந்தச் செய்தி கேள்விப்பட்டபோது மதீனா வாசிகளும் போருக்கு தயாராகிறார்கள். ஒரு சிறுவன் இடுப்பில் வாளைச் சொருகியவாறு வாள் முனை நிலத்தில் உராய வந்து கொண்டிருந்தான்.

சிறுவர்கள் போரில் சேர்க்கப்படமாட்டார்கள் என்று அறிவித்ததும் கவலையோடு மீண்டு சென்றான். அவனது கவலைக்கு மாற்றீடாக `நீ அல்குர்ஆனை மனனம் செய். அதனை நபி (ஸல்) அவர்களிடம் ஒப்புவி. அதன் மூலம் நீர் பயனடைவாய்' என்று ஒருவர் அறிவுரை பகர்ந்தார். அதனை ஏற்ற சிறுவன் அல்குர்ஆனை மனனமிட ஆரம்பித்தான்.

போர் முடிந்து நபி (ஸல்) அவர்கள் மதீனா மீண்டபோது, சிறுவன் தான் மனனமிட்டிருந்த அல்குர்ஆனின் பகுதிகளை நபியவர்களிடம் ஒப்புவித்தான். அது கண்டு மகிழ்ந்த நபி (ஸல்) அவர்கள் சிறுவனை எழுத வாசிக்கத் தெரிந்த ஒரு கைதியிடம் ஒப்படைத்தார்கள். எழுத்தறிவைக் கற்குமாறு பணித்தார்கள். அவரிடம் கற்ற சிறுவனே பிற்காலத்தில் அல்குர்ஆனை எழுத்துருவில் தொகுக்கும் பணிக்கு தலைமை தாங்கினர். அவரே ஸைத் இப்னு ஸாபித் (ரழி) ஆவார்.

தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.

தேர்ச்சி மட்டம் 5.6 : நபி ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றைக் கதையாகக் கூறுவார்.

பாடவேளை : 2

**கற்றல் பேறுகள்:**

- ஆதம் (அலை) படைக்கப்பட்ட நிகழ்வைக் கூறுவார்.
- ஆதம் ஹவ்வா சோடி தவறிழைத்த சம்பவத்தைக் கதையாக எடுத்துக் கூறுவார்.
- அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரிய முறையை சொல்லிக் காட்டுவார்
- தவறுகளிலிருந்து பாவ மன்னிப்புக் கோரி வாழ்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்காக அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- கீழுள்ள அல்குர்ஆன் வசனங்களையும் அதன் மொழி பெயர்ப்புகளையும் உரத்து வாசிக்குமாறு ஒரு மாணவனிடம் கொடுங்கள்.

  "சப்தம் தரக்கூடிய பிசுபிசுப்பான களிமண்ணால் நிச்சயமாக நாமே முதல் மனிதனைப் படைத்தோம். (நபியே) உங்கள் இறைவன் மலக்குகளை நோக்கி நிச்சயமாக நான் மனிதனை சப்தம் கொடுக்கக்கூடிய களிமண்ணால் படைக்கப் போகின்றேன் என்று கூறிய சமயத்தில் தான் மனிதனை உருவாக்கி அதில் உயிரைப் புகுத்தினால் அவருக்கு (மரியாதை செலுத்த) நீங்கள் சிரம் பணியுங்கள். (என்று கட்டளையிட்டான்)." (15: 26 - 29)

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - முதலாவது மனிதன் ஆதம் (அலை) ஆவார். அல்லாஹ் அவரை மண்ணால் படைத்தான். பூமியில் அவனது பிரதிநிதியாக அமர்த்தினான். அவரது சந்ததியே மனித இனமாகும்.
  - அவர் நீண்ட காலம் வாழ்ந்தார், மூன்று சந்ததிகளைக் கண்டார்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்க தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச் செயற்பாட்டை முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:

- அல்லாஹ் மனிதனைப் படைக்க நாடினான்.
- மலக்குகளிடம் கருத்துக் கேட்டபோது அவர்கள் ஆட்சேபித்தனர்; காரணமும் கூறினர்.
- எனினும் அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களையும் அவரது சோடியையும் படைத்தான். மலக்குகளை ஸுஜூது செய்ய வைத்தான்.
- அவர்களை சுவனத்தில் தங்க வைத்தான். அங்கு அவர்கள் அறியாமையால் அல்லாஹ்வின் கட்டளையை மீறினர். பின்னர் மன்னிப்புக் கேட்டனர்.
- அல்லாஹ் அவர்களை பூமிக்கு அனுப்பினான்.
- அவர்களுக்கு சந்ததியைக் கொடுத்தான்.
- இன்று வாழ்வோர் அவர்களின் சந்ததியே ஆவர்.
- அவர் "அபுல் பஷர்" மனிதர்களின் தந்தை எனப்படுகின்றார்.
- மனிதர்களுக்கு வழிகாட்ட அல்லாஹ் காலத்துக்கு காலம் ரஸூல்மார்களை அனுப்பினான்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட நிகழ்வை இறைதூதர்கள் என்ற நூலில் தேடித் தொகுத்து எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

குழு-2 அவர்களை ஷைத்தான் வழிகெடுத்த முறையை அல்குர்ஆன் மொழிபெயர்ப்புகள் மூலமோ நூல்களின் மூலமோ பெற்றுத் தொகுத்து எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

குழு-3 அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்ட முறையினைக் கூறும் அல்குர்ஆன் வசனத்தைத் தேடி எடுத்து அதனை எழுத்தணி வடிவில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

குழு-4 மலக்குகள் மனிதனைப் படைக்கத் தேவையில்லை எனக் கூறியதற்கான காரணத்தையும் ஷைத்தான் ஸுஜூது செய்யாமைக்காக கூறிய காரணத்தையும் அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு மூலமோ வேறு நூல்கள் மூலமோ பெற்றுத் தொகுத்து ஒழுங்குபடுத்தி எழுதிக் காட்சிப்படுத்துங்கள்

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

ஆதம் (அலை) அவர்கள் ஷைத்தானின் வலையில் சிக்கி தவறிழைத்து பின்னர் பாவ மன்னிப்புக் கேட்ட சம்பவத்தை வீட்டில் கதையாகக் கூற வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **6.0** | **:** | **பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத் தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **6.1** | **:** | **அயலாரின் உறவைப் பேணி நடப்பார்.** |
| **பாடவேளை** | | **:** | **2** |

**கற்றல் பேறுகள்:**

- அண்டை வீட்டார் யார் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அண்டை அயலவரின் சிறப்புக்களை அறிந்து கண்ணியப்படுத்துவார்.
- அண்டை அயலவரின் உரிமைகளை மதித்து நடப்பார்.
- அண்டை வீட்டாருடன் நல்லுறவைப் பேணி அவர்களின் கண்ணியத்தைக் காத்து வருவார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- கீழுள்ள குர்ஆன் வசனத்தை அழகுற ஓதும் மாணவன் ஒருவனைக் கொண்டு ஓதிக்காட்டுங்கள். மற்றொரு மாணவன் மூலம் அதன் மொழி பெயர்ப்பை வாசித்துக் காட்டுங்கள்.

وَاعْبُدُوا اللَّهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا ۖ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَبِذِي الْقُرْبَىٰ وَالْيَتَامَىٰ

وَالْمَسَاكِينِ وَالْجَارِ ذِي الْقُرْبَىٰ وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنبِ وَابْنِ السَّبِيلِ

وَمَا مَلَكَتْ أَيْمَانُكُمْ ۗ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ مَن كَانَ مُخْتَالًا فَخُورًا

"அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தைக்கு நன்றி செய்யுங்கள். (அவ்வாறே) உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும் அந்நிய அண்டை வீட்டாருக்கும் (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக்கூடிய நண்பர்களுக்கும் பயணிகளுக்கும் உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் நன்றி செய்யுங்கள் எவன் கர்வம்கொண்டு பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை." (4: 35)

- ஓதிக்காண்பிக்கப்பட்ட வசனங்கள் மூலம் மாணவர்கள் எவற்றை உணர்ந்து கொண்டனர் என வினவி கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - அயலவர் என்பதற்குப் பல வரைவிலக்கணங்கள் உண்டு.
  - அயலவர் வரையறைபற்றி அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் தெளிவுகளுண்டு. அயலவருக்கு, பல சிறப்புக்கள் உண்டு.
  - அடிக்கடி பழகுவோரும் நேசத்திற்குரியவர்களும் அயலவர்களாவர்.
  - அண்டை வீட்டாரின் உணர்வுகளை மதித்து உரிமைகளை நிறைவேற்றுவது சிறந்த நற்செயலைச் சார்ந்தது.

படி 2 : • மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரியுங்கள்.

• ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.

• குழுக்களின் அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 : • ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

• மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

• ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.

• பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:

  • இஸ்லாமிய குடும்ப எல்லைக்குள் அயலவரும் உள்ளடங்குவர்.
  • ஒரு முஸ்லிம் வீட்டின் ஒவ்வொரு திசையிலுமுள்ள நாற்பது வீடுகளும் அயல் வீட்டினர் என்ற எல்லைக்குள் அடங்குவர்.
  • அயலவர் மூன்று பிரிவிற்குள் அடங்குவர்.
    - முஸ்லிமான உறவினரான அயலவர்.
    - உறவினரல்லாத முஸ்லிமான அயலவர்.
    - முஸ்லிமல்லாத உறவினருமல்லாத அயலவர்.
  • அவ்வப்போது எம்முடன் நெருங்கிப் பழகுவோரும் அயலவரில் அடங்குவர்.
  • பயணத்தில் சக பிரயாணி, வகுப்பில் சக நண்பன், தொழுகையில் பக்கத்தில் நிற்பவர் என அயலவரின் வட்டத்தில் பலர் அடங்குவர்.
  • "தனது அண்டைவீட்டாரின் அருகிலிருப்பவரைவிட தூரத்திலிருப்ப வருக்கு முன்னுரிமையளிக்க வேண்டாம். முதலில் நெருங்கி இருப்பவருக்கும் அடுத்து தூரத்திலிருப்பவருக்கும் உபகாரம் செய்ய வேண்டும்" (அல்அதபுல் முப்ரத்)
  • "எவருடைய தீங்கிலிருந்து அண்டைவீட்டார் நிம்மதியடையமாட்டார் களோ அவர் சுவனம் புக மாட்டார்." (முஸ்லிம்)
  • அண்டைவீட்டாரின் கண்ணியத்தைக் காப்பது, அவரது கௌரவத்தைப் பேணுவது, அவருக்கு உதவிகள் புரிவது, அவரது குறைகளை மறைப்பது, அவர்களது வீட்டின் அஜ்னபிகளுக்குரிய மரியாதையை வழங்குவது போன்றன இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்டவைகளாகும்.
  • அண்டைவீட்டார், தமக்கு நோவினை செய்தபோதிலும் பழிவாங்காது பொறுமைகாத்து அவர்களுக்கு உபகாரம் செய்வது இஸ்லாமியப் போதனையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

• பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 4: 35 அல்குர்ஆன் வசனத்தின் மொழிபெயர்ப்பை நன்கு கலந்துரையாடி அண்டை அயலாரின் பிரிவுகளை இனங்கண்டு எழுதுங்கள்.

குழு-2 பின்வரும் மூன்று ஹதீஸ்களையும் வாசியுங்கள். பின்னர் அவை பற்றிக் கலந்துரையாடி அயலாரின் சிறப்புப்பற்றி ஒரு சிற்றுரை தயாரியுங்கள்.

"சாலிஹான அண்டைவீட்டாரும், விசாலமான வீடும் சிறந்த வாகனமும் உலகில் ஒரு முஸ்லிமின் வாழ்வின் சுபீட்சங்களாகும்" (அஹ்மத்)

"அல்லாஹ்வின் பார்வையில் சிறந்த அண்டை வீட்டுக்காரர் யாரெனில் தனது அண்டை வீட்டாரிடம் சிறந்தவராக இருப்பவராவார்." (திர்மிதி)

"எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டாரோ அவர் அண்டை வீட்டாருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளட்டும்." (புகாரி)

குழு-3 அண்டை வீட்டாருடனான ஒற்றுமையை மேம்படுத்துவதற்கு பொருத்தமான வழிமுறையாக அமையக்கூடிய கலந்துரையாடல் ஒன்றை எழுதுங்கள்.

**குழு-4** உங்கள் அண்டை வீட்டில் வசிக்கும் முஸ்லிமான உறவினர் அல்லது உறவினர் அல்லாத முஸ்லிம் அண்டை வீட்டாருடன் நல்ல உறவைக் கட்டியெழுப்புவதற்குரிய வழிமுறைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-5** உங்கள் வீட்டிற்கு அயலில் வசித்துவரும் முஸ்லிமல்லாத அண்டை வீட்டாருடன் நல்லுறவை வளர்ப்பதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

ஒரு வாரத்தில் ஐந்து நாட்களும் அயல் வீட்டாருக்கு செய்த உதவிகள், ஒத்துழைப்புக்கள் பற்றி பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

| நாள் | செய்த உதவி |
|---|---|
| முதல் நாள் | ......................................................................................... |
| 2வது நாள் | ......................................................................................... |
| 3வது நாள் | ......................................................................................... |
| 4வது நாள் | ......................................................................................... |
| 5வது நாள் | ......................................................................................... |

**தேர்ச்சி 7.0 : ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டெனப்தைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 : சுற்றாடலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.**

**பாடவேளை : 3**

**கற்றல் பேறுகள்:**

- சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டியதற்கான காரணங்களைக் கண்டறிந்து கூறுவார்.
- சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.
- சுற்றாடலின் சுத்தத்தைப் பேணுவது பர்ழு கிபாயா என ஏற்றுச் செயற்படுவார்.
- சுற்றாடலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- பின்வரும் பத்திரிகைச் செய்திகளை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்க வையுங்கள்.
  - டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுற்றுச் சூழலை சுத்திகரிக்கும் சிரமதானப் பணி.
  - தொழிற்சாலைக் கழிவு நீர் ஆற்றில் விடப்படுவதால் பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.
  - நச்சு வாயுக்களினால் ஓசோன் மண்டலம் பாதிப்பு.
  - பொலித்தீன் பாவனையைத் தவிர்க்க அரசு நடவடிக்கை.
- ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- சுற்றாடல் சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் விதமாக கலந்துரையாடுங்கள்.
  - சுற்றாடல் அல்லாஹ்வின் மிகப் பெரும் அருளாகும்.
  - சுற்றாடல் எனும்போது நம்மைச் சூழவுள்ள உயிரினங்கள், தாவரங்கள், காற்று, நீர், மண் போன்ற இயற்கை மூலங்கள் அனைத்தும் அதில் அடங்குகின்றன.
  - மனித நடத்தைகளால் சுற்றாடல் மாசடைந்து விடுகிறது.
  - நாம் முஸ்லிம்கள் என்ற வகையில் சுற்றாடலைப் பாதுகாப்பது தார்மீக மற்றும் சன்மார்க்க கடமையாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- குழுச் செயற்பாட்டை உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது செயற்பாட்டுப் பத்திரத்தை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- குறை நிரப்புச் செய்வதற்கு முதலில் அதே குழுவிற்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:

  - மனிதனே புவியில் அல்லாஹ்வின் பிரதிநிதி என்று அல்குர்ஆன் கூறுகிறது. எனவே புவியைப்பாதுகாப்பது மனிதனது கடமையாகும்.
  - சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலமே மனிதன் புவியைப் பாதுகாக் கின்றான்.
  - சுற்றாடலைப் பாதுகாப்பதன் அடிப்படையாக அமைவது இயற்கைச் சூழலை நேசிப்பதாகும்.
  - எமது சூழலிலுள்ள உயிரினங்கள், தாவரங்கள், நீர் நிலைகள், நாம் பயன்படுத்தும் பொருட்கள், பொது இடங்கள் அனைத்தையும் நாம் நேசிக்கப் பழக வேண்டும்.
  - சுற்றாடலுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் பல இருக்கின்றன.
  - மனிதனுக்கு ஆபத்தில்லாத உயிர்ச் சூழலைப் பாதுகாத்தல்.
  - சூழலிலுள்ள பயன்தரு தாவரங்களை அழிக்காதிருத்தல்.
  - தாவரங்களை நாட்டி சூழலின் பசுமையைப் பாதுகாத்தல்.
  - சூழலிலுள்ள நீர் நிலைகளை சுத்தமாக வைத்திருத்தல்.
  - வளியை மாசுபடுத்தும் செயற்பாடுகளைத் தடுத்தல்.
  - பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களை மண்ணில் சேரவிடாமல் மண் வளத்தைக் காத்தல்.
  - நீர் நிலைகளிலும் நிழல் தரும் மரத்தடிகளிலும் துப்புவதையும் மலசலம் கழிப்பதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.
  - இன்று சுற்றாடல் மாசடைந்துள்ளதால் நாம் பல்வேறு சூழல் பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றோம்.
  - இயற்கையின் சமநிலைக் குலைவு
  - டெங்கு போன்ற நோய்கள்
  - அதிகமான இயற்கை அனர்த்தங்கள்
  - கடலிலும் தரையிலும் உயிரினங்களின் அழிவு
  - இத்தகைய பிரச்சினைகள் ஏற்பட மனிதனே காரணமாவான்.
  - சுற்றாடலைப் பாதுகாப்பது பர்ழு கிபாயாவாகும்.
  - மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களை அப்புறப்படுத்துவதை நபியவர்கள் ஈமானுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்கள்.
  - சுற்றாடலை மாசுறச் செய்யும் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் நாம் அழகிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
  - குப்பைத் தொட்டிகளில் கழிவுகளைப் போடுதல்
  - கழிவுகளை மீள்பாவனைக்குட்படுத்தல்
  - சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களில் நாம் இனமத பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்

- சுற்றாடல் எனும்போது எமது வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், வகுப்பறை பள்ளிவாசல் சூழல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இச்சூழல்களை நாம் எப்போதும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 வீட்டுச் சூழல், பள்ளிவாசல் சூழல், பாடசாலைச் சுற்றாடலை அழகாக வைத்திருப்பதற்கான ஆலோசனைகளை கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-2 சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான வழி முறைகளை எழுதுங்கள்.

குழு-3 சுற்றாடலைப் பாதுகாப்பதுடன் தொடர்புபடுகின்ற அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களை தர்ஜமதுல் குர்ஆன் மற்றும் ரியாழுஸ் ஸாலிஹீனின் மூலம் திரட்டுங்கள்.

குழு-4 சுவரொட்டிகள் தயாரிப்பதற்காக சுற்றாடல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஐந்து வாசகங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

தமது வீட்டுக்கு அருகில் அசுத்தமாகக் காணப்படும் பகுதியை (தோட்டம், நீர்நிலை, பற்றைக் காடு, கழிவு நீர் கால்வாய்) பெற்றோருடன் சேர்ந்து சுத்தம் செய்து அது பற்றி அறிக்கை ஒன்றைத் தயாரித்து வர வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **7.0** | **:** | **ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **7.2** | **:** | **உயிர்களிடத்தில் அன்பு காட்டுவார்.** |
| **பாடவேளை** | | **:** | **2** |

**கற்றல் பேறுகள்:**

- உயிரினங்கள் எமது சூழலுக்கு அவசியமானவை என்பதைக் கண்டறிந்து கூறுவார்.
- ஸூரதுன் நஹ்லில் வந்துள்ள உயிரினங்களின் பயன்பாடு குறித்துக் கூறும் வசனங்களை ஒன்று திரட்டுவார்.
- உயிரினங்கள் எம்மைப் போன்றவை அவற்றின் மேல் அன்பு செலுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- உயிரினங்களைப் பாதுகாத்துப் பராமரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- இணைப்பு 1 இலுள்ள வரலாற்றுச் சம்பவத்தை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- உயிரினங்களுக்கு அன்பு காட்டுவதால் கிடைக்கும் பயன்களை விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
    - உயிரினங்கள் யாவும் எம்மைப் போல உணர்வுள்ளவைகளே.
    - அல்லாஹ் அவற்றைப் பல்வேறு நன்மைகளுக்காகப் படைத்துள்ளான்.
    - நபியவர்கள் உயிரினங்களிடம் அதிக அன்பு செலுத்தியுள்ளார்கள்.
    - உயிரினங்களிடம் அன்பு காட்டி அவற்றைப் பராமரிப்பது ஈமான் சார்ந்த விடயமாகும்.

**படி 2** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- குழுச் செயற்பாட்டினை முடித்தபின் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்குமாறு கூறுங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள்:

- அல்லாஹ் மனிதர்களுக்குப் போலவே உயிரினங்களுக்கும் உணர்வுகளை வைத்துள்ளான்.
- அவற்றுக்கும் அன்பு, கவலை, மகிழ்ச்சி என்ற உணர்வுகள் இருக்கின்றன.
- உயிரினங்கள் தமது உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாதவை என்பதால் அவற்றைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் எமது கடமையாகும்.
- உயிரினங்கள் விடயத்தில் நாம் அல்லாஹ்வைப் பயந்துகொள்ள வேண்டும்.
- அவற்றின் உணர்வுகளை மதித்து அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் வழிகாட்டலின்படியே நாம் அவற்றுடன் நடந்துகொள்ள வேண்டும்.
- உயிரினங்களைத் துன்புறுத்துவதும், அவற்றை அழிப்பதும் இஸ்லாம் வெறுக்கும் அநாகரிகமான செயலாகும்.
- உயிரினங்களின் மூலம் மனிதன் அதிகமாகப் பயனடைகின்றான்.
- அல்குர்ஆனின் சில அத்தியாயங்கள் உயிரினங்களின் பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. (உ-ம்) அன்ஆம், நம்ல், பகறா, நஹ்ல்
- அல்லாஹ் பல காரணங்களுக்காக உயிரினங்களைப் படைத்துள்ளான்.
  - மனிதனின் ரசனைக்காக
  - மனிதனின் தேவைகளுக்காக
  - மனிதனின் உணவுக்காக
  - சுற்றாடல் சமநிலைக்காக
  - சூழல் சுத்திகரிப்புக்காக
- ஸூறா அந்நஹ்லில் இவை பற்றி பல வசனங்கள் உள்ளன.
- உயிரினங்களின் பயன்களைக் கவனத்திற்கொண்டே நாம் அவற்றின் விவகாரங்களில் நடந்து கொள்ள வேண்டும்.
- நபி (ஸல்) அவர்கள் உயிரினங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்களாகவே நடந்து கொண்டார்கள்.
- ஓர் ஒட்டகம் கண்ணீர் வடிப்பதைக்கண்டு அதற்கான காரணத்தை அறிந்த நபியவர்கள் அதனால் சுமக்க முடியாத பளுவை அதன்மேல் சுமத்த வேண்டாம் என்று அதன் உரிமையாளனுக்கு எச்சரித்தார்கள்.
- தாகித்த ஒரு நாய்க்கு நீர் புகட்டியதன் காரணமாக பாவியான ஒரு பெண் மன்னிக்கப்பட்டு சுவர்க்கம் நுழைந்ததாகவும் ஒரு பூனையை உணவோ, தண்ணீரோ வழங்காமல் கட்டி வைத்ததனால் இன்னொரு பெண் நரகம் சென்றதாகவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
- நபியவர்களைப் போலவே ஸஹாபாக்களும் உயிரினங்களின் மேல் அன்பு வைத்திருந்தமைக்கு புஸ்தாத் சம்பவம் சிறந்த உதாரணமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 உயிரினங்களால் எமக்கும் சூழலுக்கும் கிடைக்கும் ஐந்து நன்மைகளை உதாரணங்களுடன் எழுதுங்கள்

குழு-2 ஸூரதுந் நஹ்லில் இருந்து உயிரினங்கள் பற்றிக் கூறும் பின்வரும் இறை வசனங்களை ஒன்றுதிரட்டுங்கள் (5, 6, 7, 8)

குழு-3 ஸூரதுந் நஹ்லில் இருந்து உயிரினங்கள் பற்றிக் கூறும் பின்வரும் இறை வசனங்களை ஒன்றுதிரட்டுங்கள் (66, 67, 68, 69)

குழு-4 சுற்றாடலிலுள்ள உயிரினங்களுடன் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை கலந்தாலோசித்து எழுதுங்கள்.

**பின்தொடர் செயற்பாடு- வீட்டில்:**

சுற்றாடலில் காணப்படும் உயிரினங்களைப் பட்டியற்படுத்துங்கள். அவற்றில் ஒன்றைப் பராமரிக்கும் முறை பற்றி 10 வசனங்கள் எழுதுங்கள்.

**(இணைப்பு 1)**

**வரலாற்றுச் சம்பவம்**

ஹஸ்ரத் அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் நபித் தோழர்களில் ஒருவராவார். இவர் சிறந்த ஒரு போர் வீரராகவும் படைத் தளபதியாகவும் விளங்கினார். கலீபா உமர் (ரழி) அவர்களது காலத்தில் இவர்களது தலைமையில்தான் எகிப்து கைப்பற்றப்பட்டது. அப்போது எகிப்தின் ஒரு பிரதேசத்தில் கூடாரமிட்டுத் தங்கியிருந்தார். சில நாட்களின் பின், வேறோர் இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படவே கூடாரத்தைப் பெயர்த்தெடுக்கச் சென்றார். அதன் உச்சியில் புறா ஒன்று கூடு கட்டி வாழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டார். எனவே, புறாக் கூட்டைக் கலைக்காமல் கூடாரத்தை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றார். பிற்காலத்தில் அக்கூடாரத்தைச் சூழ மக்கள் குடியமர்ந்தனர். பின்னர் அது ஒரு நகரமாக வளர்ச்சியடைந்தது. மக்கள் அந்நகரை கூடாரம் என்ற கருத்துத் தரும் புஸ்தாத் எனும் பெயரில் அழைக்க ஆரம்பித்தனர். புஸ்தாத் இன்று எகிப்தின் முக்கிய நகரங்களுள் ஒன்றாக விளங்குகின்றது.